உ
சிவமயம்

சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பாலபாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ௵ ஐப்பசி ௴ ௬உ (1942 அக்டோபர் 22 வியாழக்கிழமை) [இலக்கம் ௫3

சிவஞானபோத விரிவுரை

[இது குலசேகரன் பட்டினம் "திருவள்ளுவரகம்" திரு. ப. இராமநாதபிள்ளை யவர்கள் யாழ்ப்பாணம் கலாநிலயத்தில் தொடர்பாக நிகழ்த்திய விரிவுரையின் சாரம்:]

புத்தகம் ௫௪. இலக்கம் ௫0. தொடர்.

௧. ஏகான்மவாதம்:— இது, மாயாவாதம், பாற்கரியவாதம், கிரீடாப்பிரமவாதம், சத்தப்பிரமவாதம் என நான்குவகைப்படும். மாயாவாதமாவது, உண்மையறிவின்பாய் என்றுமுள்ளதாய், எங்கும் பரம்பியதாய் நிற்பது கடவுள். உலகமும் உலகத்துப் பொருள்களும் அறியாமையினால் கடவுளிடத்தது திரிபாகத் தோன்றுகின்றன; அப்படித் தோன்றுவது, இப்பியில் வெள்ளி தோன்றுவதுபோல ஆகையினால் அவை பொய். உலகத்துக்கு முதலாகிய மாயை, கடவுள்போல உள்ளதுமன்று; முயற்கோடுபோல இல்லதுமன்று. இவ்விரண்டுமன்றிச் சொல்லொணாததாகவிருக்கும். இம்மாயைக்கு வேறாய கடவுட்பிழம்பே (பிரமரூபம்) யான் என வேதாந்தஞானத்தாலறிவதே வீடு.

அ. பாற்கரியவாதம்:— கடவுளே, அறிவிலதும் அறிவுள்ளதுமாகிய உலகங்களாகத் திரிபெய்திற்று. அங்ஙனம் திரிபெய்தி வேறுபட்டமையை அறியாமையினாற் கட்டுற்றது. உண்மையிற் பொருள் ஒன்றே. வேதாந்த ஞானத்தால் உடம்பிற்கு வேறாய ஆவி விளங்கும். அதுவே கடவுள் என்றறிந்து அதனொடு கூடுதலே வீடு. (கூடுதல்—இலயித்தல்)

ஆ. கிரீடாப்பிரமவாதம்:— கடவுளே நான். யான் ஒரு படித்தன்றிப் பலவேறுவகைப்பட்ட விகாரப் பொருள்களோடு கூடிப் பலவாற்றான் விளையாடுகின்றேன் (விகாரம்—திரிபு) என்று உணர்வதே வீடு.

இ. சத்தப்பிரமவாதம்:— முதலாகிய கடவுள் இறுதியில் ஒலிவடிவாயிருக்கும். (முதல்—காரணம்; ஒலி—சத்தம்.) அஃது அறியாமையினால் அறிவிலதும் அறிவுள்ளதும் ஆகிய உலகங்களாய் விரியும். முடிவில் ஒலிமட்டுமே யுள்ளது. இவ்வாறு உணர்வதே வீடு. இக்கூற் கொள்கைகளையும் செய்தவன் வியாதமுனிவன்.

௨. சாங்கியமதம்:— மெய் இருபத்தைந்து. இருபத்தைந்தாவது மெய் ஆன். ஆன், புருடன், ஒரு பொருட்கிளவி. புருடனுக்கு மலினம் என்பது இல்லை. (மலினம்—திரிபு) ஆன் தாமரையிலைநீர்போல ஒட்டற்று நிற்பன. இப்புருடனே ஆவி; ஆவிகள் பல. அவை தத்துவங்களுக்கு வேறாய், அழிவிலவாய், நிறைவாய், வடிவிலவாய், அறிதலுஞ் செய்வதும் இன்றி அறிவனவாய் இருக்கும். அவை ஒன்றற்குக் காரணமாதலுங் காரியமாதலுமில. ஆவிகள் செய்யுமென்பதும், நிறப்பு (புத்தி) அறியுமென்பதும் வேறுமை புணராதார் கூற்று. முன்முதலாகிய மூலப்பகுதியையும் ஆவியையும் பகுத்துணர அறியாமை நீங்கும். அதுவே வீடு. இருபத்துநான்காவது மெய்மூலப்பகுதி. இது என்றுமுள்ளதாய், எங்கும் நிறைந்ததாய், அறிவில்லதாய், எல்லாப் பொருட்கும் காரணமாய் முப்பண்புகளும் ஒப்பநின்ற நிலையாய் வடிவிலதாயிருக்கும். இம்மூலப்பகுதியின் விளைவு நிறப்புமுதல் நிலமீறாக இருபத்துமூன்றும். நிறப்பாவது மூலப்பகுதியின் திரிபே; அது மான், அக்ககலன் எனவுங் கூறப்படும். இந்நிறப்புடன் தொன்மையே ஆவிகள் சார்ந்தமையால் அறியாமைவயப்பட்டு நின்றன. அதனால் கட்டுற்றோன் (பெத்தன்) எனப்பட்டு இன்பத்துன்ப வுணர்வுதோன்றுகின்றது. நிறப்பு, பொறிவழியான் ஞானமாய்த் திரிந்து புலன்களிற் செல்லும். இவைகளுக்கு வேறாய் இறைவன் ஒருவன் உண்டென்பது பொய். இந்நூல் செய்தவன் கபில முனிவன்.

௩. யோகமதம்:— நிலமுதல் ஆன் ஈறாகக் கூறும் மெய் இருபத்தைந்து. இருபத்தைந்தாம் மெய்யாகிய ஆன் ஒன்றிலும் தொடர்பற்று நிற்பன. மூலப்பகுதியையும் ஆவியையும் பகுத்துணர்வதுபோல எண்வகை யுறுப்புற்ற யோகமும் வீட்டுக்கு வாயிலாம். இருபத்தாறாந் தத்துவம் இறைவன் ஒருவன் உளன். அவன் முற்றுணர்வுடையவன். நூல்களைச் செய்து ஆவிகளுக்கு மெய்யுணர்வை அறிவுறுப்பவன். அதனால் அவன் இவ் ஆவிகளுக்கு வேறென்று உணரப்படும். நூல் செய்தவன் பதஞ்சலி முனிவன்.

௪. பாஞ்சராத்திரமதம்:— இருபத்துநான்காவது மெய்யாகிய பண்புக்குமேல் இருபத்தைந்தாவது மெய் வாசுதேவன். அவனே முதற்பொருள். அவனிடத்தினின்றும் கண்ணன், அநிருத்தன், மகரத்துவசன், இரௌகிணேயன் என நால்வர் உலகங்களைப் படைத்தற்பொருட்டுத் தோன்றினர். இந்நால்வரால் அறிவுள்ளதும் அறிவிலதுமாகிய எல்லாவுலகமும் படைக்கப்பட்டன. அதனால் எல்லாம் வாசுதேவன் திரிபேயாம். இவ்வாறு கூறும் பாஞ்சராத்திரத்தினின்றி வேதங்களால் உறுதிப்பயன் உண்டாகாது. ஆதலால் பாஞ்சராத்திர முறையே தீக்கைபெற்று வாசுதேவனை வழிபட்டு வாசுதேவன் வடிவில் ஒடுங்குதலே வீடு. இந்நூல் செய்தவன் வாசுதேவன்.

அகப்புறச் சமயம் ஆறு, பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதம் என்பன.

௧. பாசுபதம்:— ஆவிகள் பல, என்றுமுள்ளன எங்கு நிறைந்தன காரண காரியக் கூட்டத்தால் மெய்யுணர்வு தோன்றும்; அதனால் ஆவிகள் தனித் தனிவேறுமுள்ளன. இவ்வாவிகளுக்குப் பழமலம் என்பது ஒன்று இல்லை. மருள் வினை என்றிரண்டிற் கட்டுற்று இன்பத்துன்பங்களை நுகரும். இவ்வின்பத்துன்பங்களின் உவர்ப்புத் தோன்றி நான்முறையானே தீக்கை பெற்றவன்பால் ஆண்டவன் பேருணர்வு போய்ப்பற்றும். அப்பொழுது ஆண்டவன் தனது பண்புகளை அவன்பால் பற்றுவித்துத் தான் தன முதன்மையினின்றும் ஒழிவு பெற்றிருப்பன். இவ்வாறு ஒழிவு பெற்றிருப்பது உலகினர் குடும்பப்பாரத்தை மக்கள்பால் வைத்துவிட்டுத் தாங்கள் துறவறத்தைச் செல்லுவதை யொக்கும்.

௨. மாவிரதம்:— பாசுபதத்தில் கூறியபடி ஆவிகள் கட்டுற்று இன்பத்துன்பங்களை நுகரும். நான்முறையே தீக்கை பெற்று எது

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

"வேதாகம சைவசித்தாந்தமும் தனித்தமிழ்ச் சைவசித்தாந்தமும"

[யாழ்ப்பாணச் சிவனடியார் திருக்கூட்டத்தலைவர் ஏழாலை ஐ. பொன்னையா எழுதியது]

இத்தலைப்பெயரோடு அன்பர் திரு. க. நவரத்தினம் அவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்று நிகழும் புரட்டாதி ௨௧த் திகதியைக்கொண்ட இந்துசாதனத்தில் வெளியாகியிருக்கிறது. அதில் அவர் இருகட்சியினரதும் கொள்கைகளைப் பட்சபாதமின்றி ஆராய்வதே தமது நோக்கமெனக் கூறிக்கொண்டு............ ஈற்றில் இருகட்சியினரையும் சந்திசெய்து வைக்க முயலுகின்றார். அவரது நன்னோக்கம் பற்றியதுபோலத் தோன்றும் அம்முயற்சியை நாம் நன்றியறிதலோடு பாராட்டுவோமாக. ஆயினும், சைவசித்தாந்தத்தில் அவ்வாறு இருபிரிவுகள் இருப்பதாக நாம் இதுவரையிலும் கேள்விப்பட்டதில்லை. மெய்கண்ட சந்தான ஆசிரியர்களாவது அவர்களது கொள்கைகளோடு இணங்குவோரும் பிணங்குவோருமாகிய பிறரெவராவது அங்ஙனம் பாகுபடுத்தி வைத்தாருமில்லை. பின்னை இல்லாத ஒன்றைப் புதுவதாகப் படைத்திட்டுக்கொண்டு அதில் ஆராயப்புகுதல் அவசியமற்ற வீண்தொழிலாவதோடு யாதும் பயனற்ற சச்சரவை வளர்த்தலுக்கும் ஏதுவாகுமென்றே நாம் கருதுகின்றோம். ஆனால், அவரது அடிப்படையான நோக்கம் வேறேதாவதொன்று இருக்க வேண்டுமென்ற சந்தேகத்துக்கு அது இடந்தராமலுமில்லை. அவர் தமது கட்டுரையில் எடுத்தாளும் பொருள்கள் அச்சந்தேகத்தை உறுதிப்படுத்துவனவாகவேயுள்ளன.

இனித் தனித்தமிழன்பர்களைச் சைவவுலகினுக்கு அறிமுகப்படுத்தும்பொருட்டு எழுந்த மதிப்புரையில், "தனித்தமிழன்பர்கள் சைவசித்தாந்தத்தில் உண்மையன்புடையோராவர். சைவ சித்தாந்தமே சமயங்களெல்லாம் சிறந்த உண்மைச்சமயமென்பது அவர்கள் பெருங்கருத்தாகும்" என்று கூறுகின்றார். அப்படியிருப்பின் அது மகிழ்ச்சிக்குரியதே. ஆனாலும் அது சந்தேகந்தான். என்னை? சைவசித்தாந்தப் பெருநெறியானது தமிழ் மக்களது சமயக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு வளர்ந்ததென்பதே அவர் கருத்து என்கிறார். இதனாற் பெறப்படுவது என்ன? சைவசித்தாந்தத்திற்குத் தமிழ்மக்களது சமயக் கொள்கைகள் அடிப்படையாயின் அச்சமயக்கொள்கைகளுக்கு அடிப்படை வேறொன்றிருத்தல் வேண்டுமன்றோ? அடிப்படையொன்றுமின்றி, மாயாவாதிகள் கூறும், "மலடிமகன்" போலச் சொல்லளவிலாவது இப்பிவெள்ளிபோலத் தோற்றத்தளவிலாவது, இருக்குமா அச்சமயக்கொள்கைகள்? அவ்வாறுமன்றில்லாமையிலிருந்து தோன்றிய எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து உருத்திரிந்த போலிச் சைவசித்தாந்தத்தைப் பெருநெறியென்றுகொண்டு அதில் நம்பிக்கை வைத்திருப்பார்கள் தனித்தமிழன்பர்கள் என்பதை யாரேனும் நம்புவார்களா! நம்பத்தான் முடியுமா!! நாம் கருதுகின்றபடி சைவசித்தாந்தம் அவைதிகம் எனக்காட்டி அதனையொதுக்கி விடக்கருதும் தமது நோக்கத்திற்குத் தனித்தமிழன்பர்களது நிலையற்ற கருத்துக்களைத் துணைக்கொள்ளுகின்றார் என்பது தெளிவு. "வடமொழி வேதங்களிலும் அவற்றின் வழிவந்த சமயநூல்களிலும் காணப்படும் சமயக்கொள்கைகளுக்கும் சைவசித்தாந்த அடிப்படைக்கொள்கைகளுக்கும் எதுவித தொடர்புமில்லையென்பதே அவர்கள் கருத்தாகும்" என்று அவர் மேலும் கூறுவதனால் அது உறுதிப்படுத்தப்படும். சிவஞானபோதம் முதலிய தமிழ் நூல்களில் அங்கொன்றுமிங்கொன்றுமாகக் காணும் வடசொற்களையும் தம் வாயினால் உச்சரிக்கவும் அருவருத்து, அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்கள்தேடி முட்டுப்பட்டுத் திரியும் "தனித்தமிழன்பர்கள்" வடமொழியிலுள்ள அந்நூல்களை மனம்பொருந்திப் படித்து மேற்கூறிய தொடர்பின்மையைக் கண்டுகொண்டிருப்பார்கள் என்பது நம்பக்கூடிய காரியமா?

இனி, "ஆலயங்களையமைத்து அவற்றின்கண்ணே இறைவனது திருவுருவங்களைவைத்து வணங்கும் முறை வேதங்களிலாவது உபநிஷதங்களிலாவது .... கூறப்படவில்லை" என்றுவேதமாதிகசகல கலைகளையும் படித்துக் கரைகண்டு விட்டவர் போலக் கூறுகிறார். அவர் மேலும் ஆலயவழிபாடும் திருவுருவ வழிபாடும் தமிழன்பர்களுக்குச் சொந்தமாயமைந்த கருத்துக்கள் என்றும் அவர்களது தனிப்பெருங் கொள்கைகள் என்றும் வரையறுத்துவிடுகின்றார். வேதமுதலிய கலைகளின் சொற்பொருள் தேறமாட்டாத ஆங்கிலக் கலாவிற்பன்னர்களால் தப்புந்தவறுமாக மொழிபெயர்க்கப்பட்ட சுவடிகளைப் பார்த்துவிட்டு இம்முடிபுகளை அவர் கொள்வது வியப்பையே தருகின்றது. தமிழெல்லைக்கு அப்பாற்பட்ட நாடுகளைச்சேர்ந்த அயோத்திகாசிஅரித்துவாரம்போலொத்த இடங்களிலெல்லாம் ஆலயவழிபாடு இருப்பதை இவரறியார்கொல்லோ? இத்தாலிதேசம் முதலிய மேல்நாடுகளுட்பட எல்லா இடங்களிலும் "தனித்தமிழன்பர்கள்" போய் ஆலயங்களை அமைத்து விட்டார்களா? இவரது ஆராய்ச்சி சாலவும் வியக்கற்பாலது. சிவலிங்கார்ச்சனையும் ஆலயவழிபாடும் வேதோபநிஷதங்களிலும் கூறப்படுகின்றன என்னும் உண்மைக்கு இரு உதாரணங்கள் மட்டுங்காட்டி மேற்செல்வோம்.

இருக்வேதத்து 5-ம் மண்டிலம் 3-3-ல் "தவஸ்ரியே மருதோமர்ஜயந்த ருத்ரயத்தேஜநிமசாரு சித்திரம்" அஃதாவது தேவர்கள் பொருளும் அருளுமாம் செல்வத்தையடையுமாறு சிவபிரானது விசித்திரரூபமாகிய மகாலிங்க மூர்த்தியையருச்சித்தார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. இன்னும், "ஸர்வேஷாம் தேவாலயஸ்தம்பஸ்ய ஸ்ரீவாக்கிஷம் ஸ்ரீவயோகிஷாம், ஸ்ரீவாலயஸ்தந்தஸ்லிங்க ஸிப்தம்வா மந்த்ர ஸம்ஸ்மார தத்தம்வா" என்பது பிருஹச்சாபாலோபநிஷதம். இன்னுமிவைபற்றிய வேதோபநிஷதாதிப் பிரமாணங்களையும் பதி பசு பாச உண்மைகளும், இறைவன் "பசுபதி" என்னும் பெயரினால் அறிக்கப்படுதலும், பதியை வழிபட்டே பசு விடுபடுதல் வேண்டுமென்பதும் வித்தியாதத்துவ சிவதத்துவங்களின் பிரஸ்தாபமும்போலொத்த சைவசித்தாந்தப் பேருண்மைகள் யாவும் வைதிக நூல்களிற் பெறப்படுமாற்றையும், "வைதிகசைவம்" என்னும் பெயரின்கீழ் விரிவான கட்டுரையொன்றெழுதி இப்பத்திரிகையில் வெளியிட உத்தேசித்துள்ளோமாதலின் ஆண்டுக் கண்டுகொள்க.

இனியவர், "சங்கரர் இராமானுஜர் முதலியோரது கொள்கைகள் பிரமசூத்திரத்தை ஆதாரமாகக் கொண்டனவாகும். பிரமம் உலகமாகத் தோற்றுகின்றது என்பதே பிரமசூத்திரத்தின் கருத்து. கடவுள் உலகிற்கு முதற்காரணரேயன்றி நிமித்தகாரணரன்று என்பதே இதன் முடிக்குமுடிபு" என்று வரைகின்றார். "இக்கருத்து சைவசித்தாந்தத்திற்கு மாறுபட்டதென்பதை எவர்தான் மறுத்தல்கூடும்" என்று மகிழ்ச்சியும் கொள்ளுகின்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

பழைய கடிதங்கள்

III

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை,

1914, 1915 ஆண்டுகளில் சபாரத்தின முதலியார் எனக்கு எழுதிய பல கடிதங்கள் தவறிவிட்டன. அக் கடிதங்களுள் ஒன்று முதலியாருக்கும் எனக்குமிருந்த பரஸ்பர நேயத்தையும் அவர் பழைய வைதிக சைவத்தைப் பரிபாலிப்பதில் எவ்வளவு பேரூக்கமுடையவரென்பதையும் காட்டும். அக் கடிதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பைக் கீழே தருகின்றேன்:—

யாழ்ப்பாணம்,
25-8-1915.

எனது பிரியமுள்ள
ஜம்புலிங்க மவர்களுக்கு,

தாங்கள் 22உ எழுதிய அன்புரிமைக்கடிதம் கிடைக்கப்பெற்றேன். தங்களுடைய உதவியை யான் வேண்டியபோதெல்லாம் தாங்கள் அதனை உடனே முட்டின்றிச் செய்து வருவதற்காகப் பெரிதுங் கடப்பாடுடையேன். யாம் ஒருவரையொருவர் நேரிற் பார்த்ததில்லையாயினும் நம்மிருவருக்கும் ஏற்பட்டுள்ள நேசம் திருவருளாற் கூட்டப்பட்டதென்றே யான் எண்ணுகிறேன். இச்சிநேகம் நீடூழி நிலவுவதாக!

இத்துடன் இந்துசாதனப் (ஆங்கிலம்) பத்திரிகையொன்று அனுப்பியிருக்கின்றேன். அதன்கண் யான் எழுதிய "சமய உற்பத்தி" என்னுங் கட்டுரை காணப்படும். இவ்விஷயத்தைப்பற்றித் தொடர்ந்து எழுதக் கருதியுள்ளேன்.

தங்களை இப் பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேரும்படி யான் தூண்டியபோது கருதியது ஆங்கிலப் பத்திரிகையையே. ஆங்கிலப் பகுதியைப்போல் தமிழ்ப்பகுதி சிறந்ததன்று. அன்றியும் தமிழ்ப் பிரசுரம் வாரத்திற் கொருமுறைதான் வெளிவருவது; ஆங்கிலப் பிரசுரம் வாரத்திற்கு இருமுறை வெளியாவது. தங்களுக்கு விருப்பமானால் ஆங்கிலப் பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேரலாம். எனக்கு உத்திரவு கொடுத்தால், யானே பத்திராதிபரிடஞ் சொல்லி வேண்டியதைச் செய்கின்றேன். தமிழ்ப் பகுதியில் எப்போதேனும் நல்ல விஷயம் வெளிவந்தால் அப்பத்திரிகையை யானே தங்களுக்கு அனுப்புவேன். ஆங்கிலப்பகுதியில் என்னுடைய கட்டுரைகள் பலவற்றைக் காணலாம். யான் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் அடங்கிய பழைய பிரசுரங்களைச் சேகரித்துத் தங்களுக்குப் பின்னர் அனுப்புவேன். யான் எழுதிய கட்டுரைகளையெல்லாம் ஒருங்கு சேர்த்துப் புத்தகமாக அச்சிடக் கருதியுள்ளேன்.

தாங்கள் என்னுடைய புத்தக விஷயமாக அவ்வப்போது ஆண்டுவந்ததை யான் தொந்தரை செய்வதாக ஒருபோதுங் கருதமாட்டேன். அப்படி அடிக்கடி ஆண்டுபடியான சிநேகமே எனக்குத் தேவை. யான் விரைவில் கையெழுத்துப் பிரதியை அச்சுக்கு ஏற்றபடி எழுதி முடித்து அனுப்புகிறேன்.

யான் சில புத்தகங்களை ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடக் கருதியுள்ளேன். அவற்றுள் பல முற்றும் எழுதிமுடித்துவைத்தேன். அவையாவன:- பிரபஞ்சவிசாரம், சற்சமயவிளக்கம், சைவவேதாந்தம், சில ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களும் உண்டு. திருஞானசம்பந்தர் சரித்திரம் ஒன்று. சிவப்பிரகாசத்தை இப்போது மொழிபெயர்த்து வருகின்றேன். இந்நூல்களையெல்லாம் அச்சிடப் பார்க்கும் வரையில் யான் உயிரோடு இருப்பேனோ என்பதுதான் சந்தேகம்.

தங்கள் உண்மையுள்ள
ச. சபாரத்தினம்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

சிவஞானபோத நூல்

அச்சுவேலி, சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

(முற்றொடர்)

சனகாதி பக்குவர் நால்வருக்கும் உபதேசிக்க எழுந்தருளி வந்த தக்ஷிணாமூர்த்தி திருக்கரத்தில் தரிக்கப்பெற்றது வடமொழிச் சிவஞானபோதமேயாம். அது "திருக்கு வடகயிலைதனிற் பரமசிவனளித்த சிவஞானபோதமுணர் நந்திமுதற் சிறக்க வருங்குரவர் வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவன்" "அன்றாலின் கீழிருந்தா ரங்கையருட் போதத்தி லமலன் மலத்தை நீக்கித்தாளான்கழலை சேணுமென்றும்" எனத் திருவாவடுதுறை ஆதீனத்து தக்ஷிணாமூர்த்தி தேசிகர் அருளிய தசகாரியத்தில் கூறப்படுவதனால் உணரப்படும். உமாபதி சிவாசாரியரிடம் அருளுபதேசம் பெற்றவர் அருணமச்சிவாய தேசிகர். அவர் மாணவர் சித்தர் சிவப்பிரகாச தேசிகர். அவர் மாணவர் சைவ வேளாண் குலத்துதித்தருளிய நமச்சிவாயமூர்த்திகளெனப்படும் பஞ்சாக்ஷர தேசிகர். இவரே திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதம ஞானாசாரிய சுவாமிகள். இவருடைய சிஷ்யர்களுள் ஒருவராகிய தக்ஷிணாமூர்த்தி தேசிகரே இத் தசகாரியமென்னும் பண்டார சாத்திரம் இயற்றியருளிய உத்தமர். இச் ஞானநூபூதிச் செல்வர் குறித்தது வடமொழிச் சிவஞான போதத்தையேயாம் என்பது அம்பலவாணதேசிகர் தசகாரியத்தால் வற்புறுத்தப்படும்.

கண்ணுவர் முதலியோருக்கு வேதப் பொருளை அறிவுறுத்த எழுந்தருளிவந்த தக்ஷிணாமூர்த்தி திருக்கரத்தில் தாங்கியருளியதும் இந்தச் சிவஞானபோதமேயாம்.

ஏதமில் பவித்திரம் வலக்கானிமைப்பப்
போதம்வரை புத்தக மிடக்கையது பொற்ப
வேதியுணரா தலறி யோலமிடும் வேதம்
பாதுகைகளாகி யிருபாதமலர்சூட

எனத் திருவிளையாடற் புராணம் வேதத்துக்குப் பொருளருளிச் செய்த படலம் கூறுகின்றது. இச் செய்யுளில் 'போதம் வரை புத்தக மிடக்கையது பொற்ப' என்பதற்கு சிவஞானபோதமெழுதிய புத்தகம் இடக்கையில் விளங்கவும் எனச் சுப்பராயச் செட்டியார் உரைகண்டனர்.

மேலும், "சீதப்பளிக்கு மேனியும் பளிக்குச் செழுமலை பதித்ததுப் பன்ன—பாதமுஞ் செவ்வாய் மலருமுக் கண்ணும் பங்கசச் செங்கரநான்கும்—வேதபுத்தகமு மமுதகும்பமுந்தன் விழிமணி வடமுமெய்ஞ் ஞான—போதமுத் திரையுந்தரித்ததோர் தனிமைப் போதன் முன்றாழ்ந்தெழுந்தேத்தா" எனத் திருவிளையாடற் புராணத்து மேற்படி படலத்தில், தக்ஷிணாமூர்த்தியானவர் கூறப்படுகின்றது. இங்கே வேதபுத்தகமென்றது பதிபசுபாசமென்னும் முப்பொருளியல்பு நன்குணர்தற்குக் கருவியாகிய புத்தகம் எனப் பொருட்டு சிவஞானபோதத்தை உணர்த்தும். வேதம் அறிதற் கருவி. அற்றேல், தக்ஷிணாமூர்த்தி தியானசொரூபங் கூறுகின்ற ஆகமங்களிலும் புராணங்களிலும் அவர் திருக்கரத்திற் றாங்கியிருப்பது ஞானபுத்தகம், வித்தியாபுத்தகம், புத்தகம் எனவே கூறுதலான் அவற்றோடு முரணும்போலுமெனின் முரணாது; ஞானபுத்தகம் வித்தியாபுத்தகம், புத்தகம் என்பன சிவஞானபோத நூல் என்னுந் துணையேயன்றி, வேறு பொருள் படக்குமாறின்மையானும், வடமொழி ஆலாஸ்யமான்மியத்தில புத்தகமென வாளா கூறியதனை யாண்டு விளக்குதற் பொருட்டே ஆசிரியர் அறிதற் கருவியெனப் பொருள் படும் வேதம் என்னும் அடைபுணர்த்தோதினாராகலானும், வேதாகமங்களை முதல்வன் அருளிச் செய்தது ஆன்மாக்கள் பொருட்டன்றித் தம் பொருட்டன்றாகலான் அவற்றிற்கு வேறாய் ஆன்மாக்கட்குப் பயன்படுதலின்றி ஓர் நூலுண்டென்றற்குப் பிரமாணமின்மையானும், வேதாகமங்களுள் எல்லா நூலும் அடங்குமென்றற்குப் பிரமாணம் உண்மையானும், ஞான புத்தக முதலிய நாமத்தாற் கூறப்பட்டது வேதாகமங்களின் சாரமாயுள்ள சிவஞானபோதமே என்பது பெறப்படுதலானுமாம். ஆகவே, பூருவபக்கத்தாராகிய திரு. கா. சு. பிள்ளையவர்கள், சிவபெருமான் திருக்கரத்தில் விளங்கும் நூல் சிவஞானபோதமேயென்பதிற் சந்தேகங் கொள்ளவேண்டியதில்லை.

திருக்கைலாசபதியாகிய சிவபெருமான் மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொண்டருளித், தீக்கைப் பேறளித்துத், திருவடி ஞானம் வாயிலாகச் சிவமாந் தன்மைப் பெரும்பேறெய்துவிக்கத் திருவுளங் கொண்டு மாநடச்சட்டைசாத்திப் பரமாசாரிய மூர்த்தியாய், அக்கயிலையி னின்று மெழுந்தருளிவந்து, திருப்பெருந் துறையிற் குருந்த விருக்ஷத்தின் கீழ் வீற்றிருந்தருளிய பொழுது, தமதருமைத் திருக்கரத்திற் றாங்கப் பெற்றதும் வடமொழிச் சிவஞான போதமேயாம். எங்ஙனமெனில்; மெய்கண்ட தேவருக்குப் பல காலங்களுக்கு முன் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும், கண்ணுவ ரிருஷியருக்கும், சனகாதியர்க்கும் உபதேசிக்கப்பட்டமையினால் அங்ஙனம் சொல்லப்படும். "சிவஞான போதவ கைத்தலத் திருப்பதோர் கருணைபக் கண்டார்' எனத் திருவிளையாடற் புராணமும், "அக்கை மீது—பொருத்தமுறும் புத்தகமே கையா வெண்ணப்பொய்ம்மை யிலாச் சிவஞான போத மென்றார்" எனத் திருவாதவூரடிகள் புராணமும் கூறின. கடவுள் மாமுனிவரது திருவுளத்தை உள்ளவாறறிந்த திருவாதவூரடிகள் புராணத்துக்கு மெய்ப்பொருள் கண்ட ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள், இச் செய்யுளுரையில் 'சிவஞான போதம் ரௌரவாகமத்திலே பாசவிமோசன படலத்திலே சர்வாகம சாரமாய் விளங்கும் பன்னிரண்டு சூத்திரமென்க" என எழுதியதும் காண்க. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய திருப்பெருந்துறைப் புராண உபதேசப் படலத்திலே, "தெருளிரவலத் தன்ன சிவஞான போதந் தாங்கி—யருளிடக்கால் கவித்த ஞானமுத்திரை யமைத்த—பொருள வலக்கை விளங்கப் புன்னகை முகத்தரும்ப—மருளற விற்றிருந்தார் மாலயன் றேடிக் காணார்' என வரும் செய்யுளும், ஸ்ரீமத்ரௌரவாகமத்திலுள்ளது சிவஞானபோதமென்றும் இறைவன் திருக்கரத்திருந்தது அதுவேயென்றும் விளக்குகின்றது. ஆகவே, பூர்வ பக்கத்தார் சிலர் கடவுள் முனிவர் குறித்தது மெய்கண்டார் நூலேயெனக் கூறியதும், ரௌரவாகமத்திலுள்ளது சிவஞானபோத மென்றதற்குப் பிரமாணமில்லை எனக் கூறியதும் பொருத்தமற்ற கூற்றேயாமென்பது தெளியக் கிடந்தவாறு காண்க.

பாவனுநிஷைஷ்யாசை சம் சுத்தம்
கிருத்வாயதாவிதி|
சிவஞான போத சாஸ்த்ரஞ்
சதத்யாத் பதபிசுதனம்|
அநந்ராஹ்ய ஸ்துய: சிஷ்யோ
வரம்மண: கார்ய கர்மபி:|
அர்த்தம் பிராணுபிமாணு நிசத்
குருபயோ நிவேதவாத|

பாவனு நிகைஷ்பிருலே (சீடனே) இவனை விதிப் பிரகாரம் சுத்தனாக்கி,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானு௵ ஐப்பசி௴ ௬௳ வியாழக்கிழமை

ஸ்ரலின் கிருட்டின் ஆபத்தான நிலை

ருஷியாவிலுள்ள பிரதான யுத்த தானமாகிய ஸ்ரலின் கிருட் இப்பொழுது, "ஆவியோ நிலையிற் குலைந்தது ஆக்கை அகத்ததோ புறத்ததோ அறியேம்" என்ற நிலையிலிருக்கின்றதெனத் தந்திச் சமாசாரங்களைக் கொண்டு அறியக் கிடக்கின்றது. ருஷிய மக்களுக்குப் பிரதான அரணாகவுள்ளதும் பல கைத்தொழிற்சாலைகளையுடையதும் சிறந்த கட்டடங்களையுடையதுமான இந்தத் தானத்தைப் பகைவர்கள் தங்கள் ஆகாயப் படைகள் பெய்த இடைவிடாக் குண்டுப் பிரயோகத்தினாலும், தாங்கிகளைக்கொண்டும் மயானமாகும்படி முந்தியே பாழாக்கிவிட்டார்களாம். இச் சிறந்த தானத்தின் பெரும்பாகம் தங்கள் வசம் அகப்பட்டுவிட்டதென்று பகைவர்கள் பாராட்டுகிறார்கள். அங்குள்ள பாரிய தொழிற்சாலைகளையும் யுத்த உபகரணங்கள் ஆக்கப்படும் சாலைகள் சிலவற்றையும் சில தினங்கட்கு முந்திப் பகைவர் கைப்பற்றி விட்டனரென ருஷியரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்; உலகத்திலே முந்தி எக்காலத்தேனும் நடந்த யுத்தங்களில், இந்த ருஷியர் இப்பொழுது ஸ்ரலின்கிருட்டைப் பாதுகாப்பதற்குச் செய்யும் யுத்தம் போன்ற யுத்தம் நடந்ததில்லையென்பதை உலக சரித்திரத்தைப் படித்தறிந்தவர் நிர்க்கமாக அறிவர். கைத்தொழிற் சாலைகளுள்ள ஒரு பிரதானமான இடத்தைப் பகைவர் கைப்பற்றி விட்டார்களென இரண்டு மூன்று தினங்கட்கு முன் ருஷியரே தெரிவித்துள்ளார்கள். கைத்தொழிற் சாலைகளுள்ள தானங்களைப் பகைவர் கைப்பற்றிக் கொண்டால் ருஷியர் இந்த ஆபத்தான சமயத்திற் பகைவரை யெதிர்த்துச் சமர்புரிதல் கஷ்டமென அஞ்சக்கிடக்கின்றது. ஸ்ராலின்கிருட்டிலுள்ள யுத்த உபகரணங்கள் ஆக்கப்படும் தொழிற்சாலையைத் தாம் முற்றாகக் கைப்பற்றிவிட்டதாக ஜர்மனியர் இப்பொழுது தெரிவிக்கின்றார்கள். இவை மாத்திரமல்லாமல் ஜர்மனியர் தங்கள் ஆகாயப் படைகளையும் தாங்கிகளையும் பல்லாயிரக் கணக்கான போர்வீரர்களையும் ஸ்ரலின்கிருட் நகரிலும் வொல்கா நதி தீரத்திலும் கொண்டு கொண்டு வந்து தாக்குகிறார்கள்; இவைகளிற்பெரும்பான்மையன ருஷியருக்குப் பலியாயின. ஜர்மனியர் ஸ்ராலின்கிருட்டைக் கைப்பற்றுவரோவென்பது இன்னமும் சந்தேகத்திற் கிடக்கின்றது. அப்படித்தான் ஜர்மனியர் கைப்பற்றினும் ஸ்ராலின்கிருட் நகரம் ஜர்மனியருக்கு ஒரு மயானம்போற் காணப்படுமென்ற மன ஆறுதல் ருஷியருக்கும் மற்றைய நேசினருக்கும் ஏற்படக்கூடும். இந்த ஸ்ரலின்கிருட்டில் விரைவிலே நடக்கவிருக்கும் வெற்றி தோல்விகளைக் கொண்டே இனிமேல் நடக்கவிருக்கும் இக் கொடிய யுத்தத்தின் போக்கை ஒருவாறு ஊகித்தல் முடியுமெனலாம்.

இங்குள்ள தெருக்களின் ஈன நிலைமை

ஒருகாலத்திலே யாழ்ப்பாணத்திலுள்ள தெருவீதிகளே இலங்கை முழுவதிலும் சிறந்த தெருவீதிகளெனப் பாராட்டப்பட்டு வந்தன. ஆனால் சென்ற சில வருட காலமாக இங்குள்ள தெருக்களைப் போன்ற ஈன நிலையில் வேறெங்கேனுந் தெருக்களுண்டோவெனக் கவலைப்படவேண்டியிருக்கின்றது; இப்பொழுது நடந்து வரும் யுத்தம் காரணமாகப் பணச்செலவுக் கட்டுப்பாடு நடப்பது நிசமென்பதை நாம் மறுக்க வரவில்லை; எவ்வகையான செலவுகள் ஏற்பட்டாலும் இந்தத் தெருவீதிகளை மிகவும் ஈன நிலையுடைய எங்கள் அதிகாரிகள் விட்டு வந்தால், ஊரவர்கள் இதனாற் பலவகையான கஷ்டங்களையடைந்து வருவார்கள் என்பதையும் அதிகாரிகள் சிந்திக்கவேண்டும். மோட்டர்பஸ்கள், மோட்டர் ரதங்கள், மாட்டு வண்டி குதிரைவண்டிகள், றிக்‌ஷோ என்னுமிவைகள் மாத்திரமல்ல, துவிச்சக்கரங்களில் இத்தெருக்கள் மூலமாக ஏறிச் செல்வதும், நடந்து செல்வதுதானும் கஷ்டமாகக் காணப்படுகின்றனவே! நடுத்தெருவுகளிற் கிடங்குகளும் தெருவோரங்களிற் பொறிவுகளும் சிதைவுகளும் எங்கே பார்த்தாலும் காணப்படுகின்றன. மாரிக் காலத்தில் இத்தெருக்களிலுள்ள கிடங்குகளிலும் பள்ளங்களிலும் மழைவெள்ளம் வாரக் கணக்கில் வந்து நிற்றல் கூடுமே. தெருக்கள்மீது இதுகாறும் மெழுகப்பட்டு வந்த "தார்" இப்பொழுது கிடைத்தல் அரிதாய்விட்டாலும், தெருக்களிலுள்ள கிடங்குகளையும் பள்ளங்களையும் கல்லிட்டும் மண் கொட்டியும் சமயோசிதமாக ஒப்புரவு செய்வது அதிகாரிகள் கடனாகாதா? இந்தவிஷயத்தை இதற்குரியமேலதிகாரிகள் சிந்தித்து விரைவில் ஆகவேண்டியன செய்வார்களாக.

புதிய அனுராதபுர நகருக்கு ஸ்தலம்

கோபகுலாமா பிரதேசத்தை அதிகாரிகள் விரும்புகின்றனர்

அனுராதபுரம் அக் 17— அனுராதபுர நகரை நிர்மாணிக்கத்தகுந்த இடங்கள் என்று சொல்லப்பட்ட பல இடங்களுள் ஒன்றான கோபகுலாமாப் பிரதேசத்தைத்தான் அதிகாரிகள் ஆதரிக்கின்றனரென்று தெரிகிறது. இப்பிரதேசத்தில் ஏறக்குறைய 1500 ஏக்கர் நிலம் நுவரவிவா உணவுஉற்பத்தித்திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இப்பிரதேசம் சுத்தர கந்தவுள்ள மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அங்குக் குடியேறப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கின்றனர். அடுத்த வருடத்தில் இதேஇடத்தில் 2000 ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்கு ஒதுக்கி வைக்க அதிகாரிகள் எண்ணியிருக்கின்றனர்.

இப்பிரதேசம் அனுராதபுரத்திற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள அரசினர் காட்டுப் பிரதேசமாகும். நேகோள்வரை இது பாதுகாக்கப்பட்ட காடாகவிருந்தது. முன்பு அங்கு யானை முதலிய காட்டு மிருகங்கள் சஞ்சரித்துக்கொண்டிருந்தன. இங்கு காடுகள் அழிக்கப்படவே அவைகள் வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டன. ஆனால் சிற்சில சமயங்களிற் காட்டு மிருகங்கள் இங்கு விஜயம் செய்வதுண்டு.

இப்பிரதேசத்தின் கிழக்கு எல்லையில் அனுராதபுரம் யாழ்ப்பாணம் ரயில் பாதை செல்கிறது. இவ்விடத்தில் ஒரு சிறிய ஸ்டேசன் ஏற்படுத்த அரசினர் மாகாணத்தலைவர் ரயில்வே அதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறாரென்று தெரிகிறது.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்)

'வசதியானால் வருவேன் என்று சொல்லவேண்டும்'

அன்று தொடக்கமாக, முருகேசபிள்ளை வீட்டிற்குப் போகும்போது சுந்தரேசுவரன் குமாரசுவாமியையும் உடன் கூட்டிக்கொண்டு போகத் தலைப்பட்டான். குமாரசுவாமிக்கு அப்படிச் சுந்தரேசுவரனுடன் கூடிக்கொண்டு போவதும் காஞ்சனமாலையைக் காண்பதும் எள்ளளவேனும் பிரியமில்லை; ஆனாலும் சுந்தரேசுவரன் தாய் தங்கள் குடும்பத்திற்குச் செய்து வரும் பேருதவிகளைத் தன் மனத்திற் சிந்தித்தும், சுந்தரேசுவரனைத் தனியே அங்கே போய் வர விட்டால் சிவகாமித்தாய் மனம் வருந்துவரளென்று எண்ணியுமே குமாரசுவாமி தனக்கு இஷ்டமில்லாத இச்செயலுக்கும் உடன்பட்டுத் துணையாகச் சென்று வருவானாயினன். இப்படித்தானும் சுந்தரேசுவரனுடன் அங்கே போய் வருவதைக் குமாரசுவாமி தன் தாய்க்கேனும் சகோதரிக்கேனும் வெளியிட்டிலன்; காரணம் அவர்கள் இதனை அறிந்தால் ஒருபோது கவலைப்படுவரெனக்கொண்ட அச்சமேயாகும். முருகேசபிள்ளை வீட்டிற்கு இப்படி இடையிடையே போயவரும் மார்க்கத்தில், சுந்தரேசுவரன் காஞ்சனமாலையின் குணநிசயங்களையும் சங்கீதத் திறமையையும் கல்வியறிவையும் நவநாகரீகத்தையும் எடுத்துக் குமாரசுவாமிக்குப் பாராட்டிச் சொல்லுவதுண்டு, அவைகளையெல்லாம் குமாரசுவாமி "ஆம்" என்று கேட்டுக்கொள்வதேயன்றி எதிரொன்றும் பேசான். அந்த விஷயத்திலே குமாரசுவாமி உலகப்பற்றை அறவே துறந்த பெரியார்போல் காய்தல் உவத்தல் அகற்றி நடந்து கொள்ளுவான். முருகேசபிள்ளை வீட்டிற்கு இருவரும் போகும்போதெல்லாம் காஞ்சனமாலை இருவரையும் ஒரே வண்ணம், அதாவது பேதமின்றி உபசரிப்பாள். குமாரசுவாமி தான் தலைவாசலில் இருப்பதாகவும் சுந்தரேசுவரனே காஞ்சனமாலையுடன் பேசுவது முறையாகுமென்று சொன்னாலும், சுந்தரேசுவரன் அப்படியே செய்தற்கு உடன்பட்டாலும், காஞ்சனமாலை அதற்கு உடன்படாளாய்ப் பல காரணங் காட்டிக் குமாரசுவாமியையும் உடன்அழைத்துக்கொண்டு உள்ளே இருக்கச் செய்தே உபசரித்துப்பேசுவாள். இப்படி அவள் செய்வதைவிட்டுச் சுந்தரேசுவரனுக்கும் விருப்பமேயன்றி வெறுப்புச் சிறிதேனும் இல்லையெனலாம். சில சமயங்களிற் சுந்தரேசுவரன் குமாரசுவாமியை வரச் சொல்லிவிட்டு முருகேசபிள்ளை வீட்டிற்குத் தான் முந்திப் போவதுமுண்டு. குமாரசுவாமிபிறகு அங்கேபோய்த் தானுஞ் சிறிது நேரம் தங்கியிருந்து விட்டுச் சுந்தரேசுவரனையும் கூட்டிக்கொண்டு வருவதுமுண்டு. இந்தப் போக்குவரவுகளெல்லாம் ஒருவாரத்திற்கொருமுறை சனி யல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் வைத்துக்கொள்வார்களேயொழிய இருவரும் பள்ளிக்கூட நாட்களில் முருகேசபிள்ளை வீட்டிற்குப்போதலைச்செய்யார்கள். முருகேசபிள்ளையாக, அவர் மனைவியாக, காஞ்சனமாலையின் தமயனாக, அந்த இருவரும் இடையிடையே அங்கு வந்து போவதைவிட்டு எவ்வகையான ஆட்சேபமுஞ் செய்தாரல்லர். இருவரும் ஒருங்கு கூடிக்கொண்டு வருவதையே அவர்களும் விரும்பினார்களென்று எண்ணுதற்குத் தடையாகாது. இங்ஙனமாக ஒரு சனிக்கிழமை காலையில், குமாரசுவாமி சுந்தரேசுவரனுடைய வீட்டிற்கு வந்து போகும்போது, சுந்தரேசுவரன் குமாரசுவாமியைப் பார்த்து "அண்ணை, நான் இன்று பின்னேரம் அங்கேபோக எண்ணியிருக்கிறேன்; போகும்போது உங்கள் வீட்டிற்கு வருவேன்; நீங்களும் என்னுடன் கூடிக்கொண்டு அங்கே வருவீர்களா" என்றுகேட்டான்; "தம்பி, இன்று பிற்பகல் நான் பார்க்கவேண்டிய சில கருமங்கள் உண்டு; ஏன் அடுத்த சனிக்கிழமை போகலாமே; நானும் உடன் வருவேனே" என்று குமாரசுவாமி கேட்க, சுந்தரேசுவரன் "அப்படியல்ல, அண்ணை, நான் நிச்சயமாக வருவேனென்று போன கிழமை காஞ்சனத்திற்கு வாக்களித்துவிட்டு வந்தேன்; ஆனதால் அவள் எங்களை எதிர்பார்த்தவண்ணமே யிருப்பாள்; அப்படியிருக்க நாங்கள் போகாமல் விடுவது சரியல்ல, போகாமல் விட்டாற் காஞ்சனம் கவலைப்படுவாள்; பலவாறு யோசிப்பாளென்று அஞ்சுகிறேன்" எனச் சுந்தரேசுவரன் பதில்சொன்னான்; "தம்பி, எவருக்காயினும் எப்போதாயினும் நிச்சயமாக வருவேன் என்று வாக்குப்பண்ணவொண்ணாது; வசதியானால் வருவேன் என்றே சொல்லிவைத்தல் வேண்டும்; அப்படிச் சொன்னவிடத்தில் இராசிகம் தெய்விகமாக, தவறினாலும் பாதகமில்லை; காத்திருந்தவர்களும் அதிக கவலைப்படமாட்டார்கள்; இன்றைக்கு மாத்திரம் நான் வருவேன், நீ அங்கே முந்திப்போ; இனிமேல் இப்படி எவருக்காயினும் உறுதியாகச் சொல்லிவிட்டுப் பின் இடர்ப்படாதே" என்று குமாரசுவாமி கூறிவிட்டுத் தன் வீட்டிற்கு மீள, சுந்தரேசுவரனும் "ஆம் அண்ணை, நான் இனிமேல் அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிச் சிறிது தூரம் அவனுடன் சென்று அவனை வழிவிட்டுத் தானுந் தன் வீட்டிற்கு மீண்டான்.

"எந்த நேரமும் அந்த எண்ணந்தான்"

அன்று பிற்பகல் மூன்றுமணி வரையிலிருக்கும் சுந்தரேசுவரன் முருகேசபிள்ளை வீட்டிற்குப் புறப்படுதற்கு ஆயத்தமாகத் தலைவாசலில் வந்தான். வரும்போது, அவனுடைய நல்லகாலத்தின் பயனோ பொல்லாக்காலத்தின் பயனோ நாமறியேம், முருகம்மான் முப்பத்திரண்டு பல்லையுங் காட்டிக்கொண்டு தங்கள் தலைவாசலை நோக்கி வருவதைக் கண்டான்; "தம்பி எங்கோ புறப்படுவதுபோ லிருக்கிறது" என்று முருகர் வினவ, "இல்லை, அம்மான்; உங்களை வெகு நாளாகக் காணவில்லை, உந்தப்பக்கமாகத்தான் புறப்பட்டு வரலாமென்று யோசித்தேன்; கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த விதமாக நீங்களும் நான் நினைக்க வருகிறீர்கள், உங்களுக்குச் சாவில்லை, அம்மான்; வாருங்கள் இப்படி இருங்கள்" என்று சொல்லிச் சுந்தரேசுவரன் முருகனை உபசரித்து ஒரு நாற்காலியைக் காட்டி அதில் இருக்கச் செய்து தானும் அயலிலுள்ள ஒரு நாற்காலியில் இருந்தான். "தம்பி, எல்லாருஞ் சுகந்தானே; ஒரு விசேஷமுமில்லையே; முருகேசபிள்ளை வீட்டிற்கும் பல நாளாக நான் போகவில்லை, உங்களைக் கண்டுகொண்டுதான் அங்கே போகலாமென்றெண்ணி வந்தேன்; எங்கே உங்கள் அப்பாவைக் காணோமே" என்று வினவினார் முருகர்; "அப்பா சற்று முன்பு இங்கேதானே நின்றார்; எங்கும் போயிருக்க மாட்டார்; அம்மாவைக் கேட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தாயிடம் போய் விசாரித்தபோது, தாய் தனக்கு அவர் சென்ற இடம் தெரியாதென்று சொன்னாள். சுந்தரேசுவரன், முருகரைத் தன் தாயிடம் (இருந்து பேசப்) பொறுப்பித்துவிட்டுத்தான் சீக்கிரத்தில் முருகேசபிள்ளை வீட்டிற்குப் போகவேண்டுமென நோக்கங்கொண்டானாய் "அம்மா, அம்மா, முருகம்மான் வந்து தனியே தலைவாசலில் இருக்கிறார்; ஐயாவையுங் காணேன், அவரைத் தனியேயிருக்க விடுவது சரியல்ல, நீங்கள் தலைவாசற் பக்கம் வாருங்கள்" என்று தாயைக் கேட்டான். "மகனே, கையில் வேலையாயிருக்கிறேன்; விட்டு வர முடியாது; உங்கள் ஐயா வருமட்டும் நீயே அவருடன் பேசிக்கொண்டிரு, வீடு தேடி வந்தவரைக் காத்துக்கொண்டு தனியேயிருக்கவைப்பது சரியல்லவடா தம்பி" என்று தாய் சொல்லிக் கடத்தி விட்டாள். சுந்தரேசுவரன் மனம் புழுங்க மீண்டு வந்து பழையபடி முருகரின் பக்கத்தில் இருந்தான். முருகர் அவனிடம் பல கேள்விகளைக் கேட்டார்; அவன் அவைகளுக்கெல்லாம் உடனுக்குடன் விரைவாகப் பதில் சொன்னான். முருகரை எவ்வளவு விரைவாகக் கடத்தி விடலாமென்று சுந்தரேசுவரன் நினைத்தானோ, அவ்வளவு ஆறுதலாக முருகரும் அங்கே அவனுடன் அழுத்தி வார்த்தையாடிக்கொண்டிருந்தார். சுந்தரேசுவரன் காஞ்சனமாலை வீட்டிற்கு உடனேபோக முடியாதவனாகவிருந்தானாயினும் அவன் சிந்தை முந்தியே காஞ்சனமாலை வீட்டிற்குப் போய்விட்டது; இந்த நிலையில் அவன் இருக்கும்போது முருகர் "உமது தங்கைச்சி இப்பொழுதும் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படித்து வருகிறதா" என்று தன் மனத்தை எங்கோ செலுத்திவிட்டிருந்த சுந்தரேசுவரனைக் கேட்க, அவன் "காஞ்சனமாலை சங்கீதத்தில் நன்கு தேறிவருகிறாள், அம்மான்" என்று பராமுகமாகப் பதில் சொன்னான். அவன் சொன்ன பதிலைக் கேட்ட முருகர் சிரித்துக்கொண்டு "என்னடா, தம்பி, எந்த நேரமும் உனக்கு அந்த எண்ணமாகத்தான் இருக்கிறது; அது நல்லதுதான்" என்று சொன்னார். "இல்லை, அம்மான், வாய் தடுமாறிச் சொல்லிவிட்டேன்" என்றான் சுந்தரேசுவரன்; "அது எனக்கு விளங்கும் தம்பி, உன்மேல் ஒருபிழையுமில்லை" என்றார் முருகர்; இருவரும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"தனியே காணக் காத்திருந்தேன்"

நேரம் பிற்பகல் நாலுமணிக்கு மேற்பட்டுவிட்டது; குமாரசுவாமி தான் பார்க்கவேண்டிய கருமங்களைத் துரிதமாகப் பார்த்துவிட்டு, சுந்தரேசுவரன் முருகேசபிள்ளை வீட்டில் தன் வரவை எதிர்பார்த்திருப்பானென்று எண்ணி விரைந்து அங்கே புறப்பட்டுப் போவானாயினன். முருகேசபிள்ளையும் மனைவியும் அந்நேரத்தில் தங்கள் மகளுக்கு மீனாட்சி யென்னும் பணிப்பெண்ணைத் துணையாக இருத்திவிட்டுச் சிறிது தூரத்திலுள்ளதாகிய ஒரு வீட்டிற்கு அவ்வீட்டில் நடக்கும் மங்கல கருமத்தின் பொருட்டுப் போய்விட்டார்கள். காஞ்சனமாலை தன்னை விசேஷமாக அலங்கரித்துக் கொண்டு நெடுநேரம் சுந்தரேசுவரன் குமாரசுவாமி யென்னுமிருவருடைய வரவையும் ஆவலுடன் எதிர்பார்த்தபடியிருந்தாள்; அவர்கள் வந்திலர்; வாராமைக்குக் காரணம் என்னவோ என்று பலவாறு யோசித்துச் சிரமம் பூண்டவளாய், பணிப்பெண்ணை அவர்கள் அங்கே வந்தால் உடனே தனக்குத் தெரிவிக்கும்படி சொல்லித் தலைவாசலில் இருக்கவிட்டு, தான் தனது அறையுட்சென்று சிரமபரிகாரமாக யாழை வாசித்துப் பாடிக்கொண்டிருந்தாள். அப்படி அவள் இருக்குஞ் சமயத்திலே குமாரசுவாமி அங்கே வந்தான்; வந்து தலைவாசலிலிருந்த பணிப்பெண்ணாகிய மீனாட்சியைப் பார்த்து "உங்கே வந்திருக்கும் ஐயாவிற்கு நான் வந்திருக்கிறேன் என்று போய்த் தெரிவி" என்று சொல்ல, யாழின் ஓசையினால் அவன் சொன்னது அவளுக்குச் சரியாகக் கேளாமையினாற் போலும், அவள் உடனேபோய்க் காஞ்சனமாலையிடம் "சின்னம்மா, அந்த ஐயா வந்திருக்கிறார்; உங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்" எனலும் "எந்த ஐயா" என்று காஞ்சனமாலை வினவ "அந்த ஐயாவோடு கூடிக்கொண்டு இங்கே வருகிற ஐயாதான்". என்று அவள் சொல்ல, "மற்ற ஐயா வரவில்லையா" என்று இவள் கேட்க, "இல்லை, அவர்மாத்திரம்தான் வந்திருக்கிறார்" என்று அவள் சொல்ல, "சரி, அவரை இங்கே வரச்சொல்லு" என்றாள் காஞ்சனமாலை; மீனாட்சி வந்து அப்படியே சொல்ல, குமாரசுவாமி உள்ளே செல்ல, இடையில் வந்து அவனை உபசரித்து அழைத்துக்கொண்டு போய் ஸோபாவில் இருக்கச்செய்தாள் காஞ்சனமாலை; "அவர் எங்கே, இன்னமும் வரவில்லையா! தங்கைச்சி" என்று நின்ற நிலையில் ஆவலோடு வினவினான் குமாரசுவாமி; "அந்தக் கேள்வியைத்தான் நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்" என்று காஞ்சனமாலை சொன்னாள்; "அவர் முந்தியே இங்கு வந்திருப்பதாகவும் நான் பிறகு வருவதாகவும் நாம் இரண்டு பேருஞ் செய்துகொண்ட ஒழுங்கு; சங்கேதப்படி அவர் முந்தியே இங்கு வந்திருப்பாரென்று எண்ணியிருந்தேன்; இந்நேரவரையில் அவர் வராமலிருப்பதற்கு ஞாயமில்லையே" என்று கவலைப்பட்டுக்கொண்டு நின்றான் குமாரசுவாமி, "ஏதோதடை நேர்ந்திருக்கக்கூடும்; சொன்னால் வராமல் விடமாட்டார், நீங்கள் இப்படி உட்காருங்கள்" என்று மீளவும் இருக்கும்படி கேட்டாள் காஞ்சனமாலை; "இல்லை, அம்மா, நான் மீண்டுபோய் இடைவழியில் அவரைக்கண்டு கூட்டிக்கொண்டு வருகிறேன்; இடைமார்க்கத்திற் சந்திக்காவிட்டால் அவருடைய வீடு வரையிற் சென்று நேரில் விசாரித்துக் காலதாமதத்திற்குக் காரணமென்ன என்று அறியாதவரையில் என்மனம் ஆறாது; உத்தரவு தாரும் தங்கைச்சி" என்று சொல்லிக்கொண்டு வெளியே வரப் புறப்பட்டான் குமாரசுவாமி; "நீங்கள் என்ன சிறுபிள்ளைப்புத்தி கொண்டாடுகிறீர்கள். அவர் வருவார்தானே; ஏதோ தாமசம் நேர்ந்ததனால் நிற்கின்றார்போலும்; உங்களை இங்கே வரும்படி சொல்லிவிட்டு அவர் ஒருபோதும் வராமல் விடமாட்டார்: அவருடைய இயல்பை நான் அறிவேன்" என்று குமாரசுவாமியைத் தடுத்து அங்கே இருக்கும்படி செய்தாள் காஞ்சனமாலை; குமாரசுவாமி சில நிமிஷ நேரம் அவள் கேட்டபடி அங்கே இருந்துவிட்டு, "தங்கைச்சி, அவர் வருமளவையும் நான் தலைவாசலில் போயிருக்கிறேன்" என்று விநயமாகச் சொன்னான்; "இல்லை, நீங்கள் இங்கேதான் இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்; நீங்கள் தலைவாசலில் தனியே இருக்கவிட்டால் அவர் வந்தவுடன் ஏன் அப்படிச் செய்தாய் என்று என்னைத்தான் குறை சொல்வார்; அவருக்கினிய நீங்கள் எனக்கும் இனியவரா[illegible]; வேறொன்றும் யோசிக்கவேண்டாம், இப்படியே இருங்கள்" எனச் சொல்லிக்கொண்டு காஞ்சனமாலை பக்கத்தே விநயமாக நின்றாள். குமாரசுவாமியும் அவளுடைய சொல்லைத் தட்டிவிடக்கஞ்சி அப்படியே யிருந்தவன் "ஏன் தங்கைச்சி நிற்கிறாய்; அப்படி இருக்கலாமே" எனலும் "ஓம்" என்று சொல்லிவிட்டு அவள் தலைவாசற் பக்கஞ் சென்று அங்கிருந்த மீனாட்சியைப் பார்த்து "அந்த ஐயா இங்கே வந்தவுடன் என்னிடம் வந்து சொல்லு" என்று கட்டளையிட்டு விட்டுப் பழையபடி அறைக்கு மீளவந்து, [illegible] முன்றலை இருவர்களாலும் வாய்க்கு நேரே பிடித்தபடி "நான் உங்களைத் தனியே காணவேணும் காணவேணும், என்று எத்தனையோ நாளாகக் காத்திருந்தேன்" என்று முகத்தில் அச்சமும் நாணமும் கவலையும் உடன்தோன்ற ஒவ்வொரு சொல்லாக மெல்லப் பணிந்த தலை குனிந்தபடி கூறினாள்; "ஏன், தங்கைச்சி, அப்படிச் சொல்லுகிறீர்? சுந்தரேசுவரன் உம்மிடத்தில் உண்மையான அன்புபூண்டிருக்கிறான்; நீரும் அவனிடத்தில் மெய்யான காதல் கொண்டிருக்கின்றீர் என்பதை நான் நன்கு அறிவேன்; உங்களிருவருக்கும் விரைவில் விவாக நிறைவேறுமென நான் அறிவேன்; அவன் வாக்குத் தவறான்: அவனுடைய தகப்பனாரும் ஒரு பெரிய மனுஷன்; அவரும் சொற்பிசகாதவர்; அப்படியிருக்க உமக்கென்ன கவலை! நீங்கள் இரண்டு பேரும் எக்காலத்திலும் நல்லாயிருக்கவேண்டுமென்பதுதான் என் விருப்பம்; ஆண்டவன் உங்களைக் காப்பாற்றுவான்; நானுமட்டும், என் தாய் சகோதரங்களட்டும் உங்கள் விவாகத்தைவிட்டுச் சந்தோஷப்படுவேயொழியக் கவலைப்படமாட்டோம்; குறைநினைக்கமாட்டோம். நீர் வேறு என் சகோதரம் வேறு என்று எண்ண என்னால் முடியாதம்மா; நான் சுந்தரேசுவரனுடன் நண்பனாயிருக்கும் வரையில் உம்முடைய எண்ணத்திற்கு மாறாக அவனை ஏதுஞ் செய்யவிடமாட்டேன்; தங்கைச்சி, நீர் கவலைப்படவேண்டாம்" என்று குமாரசுவாமி பரிவுடன் சொன்னான்.

(வரும்)

இந்தியாவில் இலங்கைப் பிரதிநிதி

ஸேர் பரன் ஜயத்திலகாவுக்குப் பதவி

புதியடில்லி, அக் 17 இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகவிருந்து இந்தியாவில் வேலை பார்க்க இலங்கை அரசாங்க சபை முதல்வர் ஸேர். பரன் ஜயதிலகா நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் அப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

மந்திரப்பொருத்தம் பார்க்கும் முறையும் பிறவும்

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

தன் பெயரெழுத்து முதல் உபாசிக்கப்போகும் தெய்வத்தின் மந்திர முதலெழுத்துவரை யுள்ள எண்ணிக்கைத் தொகையை மூன்றாற் பெருக்கி ஏழாற்பிரித்து மிச்சம் ரணம். பின் மந்திரத்தின் முதலெழுத்து முதலாக உபாசிக்கிறவன் பெயரெழுத்து முதல்வரையு மெண்ணின தொகையை ஏழாற்பெருக்கி மூன்றாற்பிரித்த மிகுதி ரணி. ரணி அதிகமானலுத்தமம். சமனாகில் மத்திமம். ரணிகுறைந்தால் உபாசியாதிடவும். ஐம்பத்தோரு எழுத்திலே தன்பெயர் அகரமாகில் மந்திரத்தின் எழுத்து வேறாகில் அதுமுதலாக எண்ணிக்காண்பதுவே முறை.

அ. ஆ இ. ஈ. மேடம். உ ஊ ரு ரூ இடபம். ஞ ஞ, மிதுனம். ஏ ஐ, கர்க்கடகம், ஒ ஓ, ஔ, சிங்கம் அம் அஃ, ஷ ச ஹ ள க்ஷ, கன்னி, கவர்க்கம் துலாம், சவர்க்கம், விருச்சிகம், டவர்க்கம் தனு, தவர்க்கம் மகரம். பவர்க்கம் மகரம்.பவர்க்கம்கும்பம்யரலவ மீனம், செபஞ்செய்கிறவனுடையபெயரின் முதலெழுத்திலிருந்துகணக்கிடவேண்டும். ஒன்று, ஐந்து, ஒன்பதுமித்திரன் இரண்டு, ஆறு, பத்து சேவகன் மூன்று ஏழு பரமமித்திரன், பன்னிரண்டு, எட்டு, நான்கு, சத்துரு என அறிந்து நல்ல முகூர்த்தத்தில் மந்திர உபதேசம்பெற்று செபஞ்செய்து முறைப்படி அக்கினி காரியஞ்செய்து தர்ப்பணம் பிராமண போசனமும் செய்ய மந்திரசித்தியை அடைகிறான். ஒரு மந்திரத்தை ஒவ்வொரு விசேஷமான பதார்த்தங்களைச் சேர்த்து ஓமஞ்செய்து வெவ்வேறு பலனையடையலாம். ஒவ்வொருநாளும் விடியற்காலம் ஸ்நானஞ் செய்து ஆயிரம் உருச்செபிக்க எண்ணிய பொருள் கைகூடும். சூரிய கிரகணகாலத்தில் கருங்காலிச்சமித்தை நெய்சேர்த்தோமஞ்செய்யத் திரவியப்பேறுண்டாம். அமாவாசையிலன்று ஆயிரம் தர்ப்பணஞ்செய்ய அசாத்தியமான கருமங்களெல்லாங் கைகூடும். அதிகாலையில் கிணற்றடியிலிருந்து எண்ணூறுரம் செபம் பண்ணி அத்தண்ணீரினால் ஸ்நானஞ் செய்தால் கெட்ட கனவின் குற்றம் நீங்கும். பசுப்பாலை மாத்திரம் புசித்து இலட்சம் செபம் செய்ய (64) கலைஞானங்களிலும் தேர்ச்சியடைந்தவனாவான்.

எல்லா மந்திரங்களையும் பிரபோதகாலத்தில் செபஞ்செய்யவேண்டும். இப்படிச் செய்யின் மந்திரம் அதிசீக்கிரமாகச் சித்திக்கும். ஆனால் நரசிம்ஹ மந்திரங்களுக்கும், சூரியனுக்குரிய மந்திரங்களுக்கும், மூன்று எழுத்துகளுள்ள மந்திரங்களும், கனவில் கண்ட மந்திரங்களுக்கும் மாலாமந்திரங்களுக்கும் மந்திரப்பொருத்தம் பார்க்கவேண்டியதில்லை.

சித்தம், சாத்தியம், சுசித்தம், அரி, இதுமுதலிய (16) வகையாகப் பொருத்தம் பார்க்கும் முறை திருக்கணித பஞ்சாங்கத்திலிருக்கிறது. சில அனுபவசாலிகளுக்கன்றி ஏனையோர்களாலியலாதிருக்கிறது. எமக்கும் அப்படியே; இயன்றவரை சந்தேக விபரீதமின்றியறிந்து பிரசுரிப்போம். அறிந்தவர்கள் இப்பத்திரிகை மூலமாகப் பிரசுரித்தால் எல்லோருக்கும் உபயோகப்படுமென எண்ணுகின்றோம்.

இலங்கை சேம வங்கி

இலங்கையிற் பணஞ்சேமிப்போர்க்கு [illegible] 1942-க்குரிய [illegible] 33 [illegible]

(ஒப்பம்) [illegible] காரியதரிசி

G 31 22-10-42

தேகவியோகம்

இயற்றமிழாசிரியர் ஸ்ரீமத். அ. க. வைத்திலிங்கபிள்ளை

தமிழன்னையின் தவப் புதல்வரும், சிறந்த கல்விமானும், தணிகைப்புராண உரையாசிரியருமாகிய காலஞ் சென்ற ஸ்ரீஅம்பிகைபாக உபாத்தியாயர் அவர்கள் குமாரனும், இயற்றமிழாசிரியருமாகிய ஸ்ரீ அ. க. வைத்திலிங்கபிள்ளை அவர்கள் தம்மைச் சிலநாட்களாகப் பிடித்த நோய்காரணமாக நிகழும் சித்திரபானு வருடம் புரட்டாதி மாதம் 25-ந் திகதி (11-10-42) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2½ மணியளவில் சிவபதமடைந்தார்கள். இவர் இறக்கும்போது வயது 67. தமது தந்தையாரைப் போலவே இவர் அடியார் பக்தி, சிவபக்தி முதலியவற்றிற் சிறந்தவர். இவர் பலவருடங்களாகத் தமது தந்தையாரால் ஸ்தாபிக்கப்பட்ட இணுவில் ஸ்ரீ அம்பிகைபாக வித்தியாசாலையில், தலைமையாசிரியராக விருந்து பலமாணாக்கர்களுக்குக் கல்வியமுதை ஊட்டி வந்தார்கள். அதுவுமன்றி, 'இந்துசாதனம்' 'செந்தமிழ்', 'ஞானசாகரம்' முதலிய பத்திரிகைகள் வாயிலாக அரிய விஷயங்களை எழுதி வெளிப்படுத்தியுமுள்ளார். அகத்திய மகாமுனிவர் அருளிச்செய்த 'பிள்ளையார் கதைக்கு' அரும்பதவுரைகளும், விசேடவுரைகளும் எழுதி வெளிப்படுத்தியவர். காலஞ்சென்ற டாக்டர். உ. வே. சாமிநாதையர், குமாரசுவாமிப் புலவர் முதலிய புலவர் பெருமக்களோடு நெருங்கிய பழக்கமுடையவர். இப்பெரியார் தலைமை யாசிரியர் பதவியில் நின்று இளைப்பாறியதும், தமது தந்தையாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீஅம்பிகைபாக வித்தியாசாலையைப் பரிபாலித்து வந்தார்கள்.

இவருடைய இறுதிக்கிரியைகள் அடுத்த நாளாகிய திங்கட்கிழமையன்று பல சன சமூகத்தில், இவரது சிரேஷ்டபுத்திரரும் ஸ்ரீஅம்பிகைபாக வித்தியாசாலை ஆசிரியருமாகிய K. V. நாதன் அவர்களால் விதிப்படி [illegible] செய்யப்பெற்றன. இப்பெரியாரைப் பிரிந்து பெருந் துன்பமுறும் மனைவி, மக்கள், ஏனைய சுற்றத்தாருடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

—[illegible]

பாடசாலைகட்கு ஒதுக்கிடம்

தரைமட்டத்திற்குக்கீழ்க் கட்டப்பட வேண்டுமாம்

இலங்கைக் கல்விச் சங்கத்தின்வற்புறுத்து

அபாயப் பிராந்தியங்களிலுள்ள பாடசாலைகளுக்கு அரசினர் தரை மட்டத்திற்குக் கீழுள்ள மறைவிடங்கள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானம் அடுத்த சனிக்கிழமையன்று நடக்கவிருக்கும் இலங்கைக் கல்விச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட இருக்கிறது. குறித்த தீர்மானம் கூறுவதாவது:-

அபாயப் பிராந்தியங்களில் பள்ளிக் கூடங்களுக்குச்செல்லும் குழந்தைகளுக்கும், பொது ஜனங்களுக்கு மாகக்கொங்கற்றினாலும் கற்களாலும் கட்டப்பட்டிருக்கும் மறைவிடங்கள் போன்ற பதுங்குமிடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று இச்சங்கம் அபிப்பிராயப்படுகிறது.

இப் பாடசாலைகளின் மானேஜர்களிடம் பதுங்கு மிடங்கள் கட்டுவதற்குப் போதிய நிதி இடையாதாகையாலும் இச் சமயத்தில் குழந்தைகளைப் பாதுகாப்பது அரசினரின் பொறுப்பாகையாலும் அபாயப் பிராந்தியங்களிலுள்ள பாடசாலைகளுக்குத் தக்க விமானத்தாக்குதல் மறைவிடங்கள் அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி கல்வி மந்திரியையோ அல்லது பொது ஜனப் பாதுகாப்புக் கொமிஷனரையோ கேட்டுக் கொள்வதென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது.

குறித்த கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கும் பல தீர்மானங்களில் சங்கை ஜி. பி. ஜாக்சனின் தீர்மானமும் ஒன்றாகும். அத் தீர்மானம் கூறுவதாவது:

அபாயப் பிராந்தியங்களில் கட்டாயமாக வசிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லாதவர்கள் இவ்விடங்களிலிருந்து உடனே வெளியேற வேண்டுமென்று கடந்த மார்ச் மாதத்தில் அரசினர் உத்தரவிட்டனர். இப் பிரதேசங்களிலிருந்த அனேக விடுதிகள் போன்ற ஸ்தாபனங்களுக்கு இவ் வுத்தரவை நிறைவேற்றுவதில் செலவு ஏற்பட்டது. இச் செலவை அரசினர் ஏற்க வேண்டுமென்று இச் சங்கம் அபிப்பிராயப் படுகிறது.

வித்தியாபகுதியிற் சிக்கனம்

பாடசாலைக் கட்டடங்களுக்குக் கிடுகினுற்கூரைபோடச் சிபார்சு

பள்ளிக்கூடங்களுக்காகக் கட்டப்படும் புதிய கட்டடங்களுக்கான செலவைக் குறுக்குவது எங்கெங்குச் சாத்தியமோ அங்கெல்லாம் ஓடுகளுக்குப் பதிலாகக் கிடுகுகளைக் கொண்டு கூரைபோட உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

புதிய கட்டிடங்களுக்காகப் பள்ளிக் கூடங்களுக்கு நன்கொடை அளிப்பது சம்பந்தமாகக் கல்வி இலாகா நிர்வாகக் கொமிற்றி குறித்த சிபார்சைச் செய்திருக்கிறதென்று தெரிகிறது. புதிய கட்டிடங்களுக்கு நன்கொடை அளிக்கும் விஷயத்தில் நிர்வாகக் கொமிற்றி ஓடுகள் கிடைப்பதிலிருக்கும் கஷ்டங்களையும் அதன் விலையையும் யோசித்ததாகத் தெரிகிறது. இக் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்குக் கிடுகுகளைக் கூரைக்கு உபயோகிப்பதே வழியென்று அவர்கள் அபிப்பிராயப் பட்டனர்.

கட்டடங்கள் அமைப்பதில் இது மாதிரிச் சிக்கனம் கையாளப்படாவிட்டால், கட்டடச் சாமான்களின் விலை அபரிமிதமாக ஏறியிருப்பதால் இதற்காக அளிக்கப்படும் நன்கொடைகளை அதிகப்படுத்த வேண்டியது அரசினரின் கடமையாகுமென்று அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

வேலூர்ச்சிறையில் கைதியின் விபரீதச்செயல்

வேலூர் அக் 16

வேலூர் மத்திய சிறையில் நேற்று ராஜகோபாலன் என்ற தூக்குத் தண்டனை யடைந்த கைதியைத் தூக்கிலிடுவதற்கு அழைத்துக் கொண்டு சென்ற பொழுது திடீரென்று கைதி சிறைக் காவற்காரர்களைத் தாக்கி, அலீஜ் என்பவருடைய காதைக் கடித்து விட்டதாகவும் தெரிய வருகிறது. ஆயினும் கைதி குறித்த வேளையில் தூக்கிலிடப்பட்டான். இத்தகைய கொலைப் பாதகங்களிற் கைதி பேர்போனவன் எனத் தெரிகிறது.

யுத்தத்தின் பின்பு ஜெர்மனியை நடத்தும் விதம்

கான்டர் பெரி ஆர்ச் பிஷப் அறிக்கை

லண்டன் அக் 19

கான்டர்பெரி ஆர்ச் பிஷப் டாக்டர் டெம்பிள் நேற்ற (ஞாயிற்றுக் கிழமை) இரவு யுத்தம் முடிந்த பின்னர் ஜெர்மானியரை நடத்தும்விதம் பற்றி ஒரு முக்கியமான அறிக்கை வெளியிட்டார்.

நாஜி அட்டூழியங்களுக்குக் காரணஸ்தர்களான ஒவ்வொருவரையும் தண்டிக்க வேண்டுமென்றும் ஐரோப்பாவில் பிரஷ்யாவால் மற்றொரு தாக்குதல் நடைபெறுவது தடுப்பதற்கான வசதி செய்ய வேண்டுமென்றும் எதிர்கால சந்ததியினரைச் சேர்ந்த சாதாரண ஜெர்மன் பிரஜைகளுக்கு நாகரிக நலன்களில் சமமான பங்கு கிடைப்பதற் தேவையான சமரசத்தை யுண்டு பண்ண வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கான்டர்பெரி ஆர்ச் பிஷப் கூறியதாவது:—

உலகம் ஜெர்மானியரைப் பற்றி எப்படி அபிப்பிராயப் படுகிறதென்பதை ஜெர்மானியர் நன்கு உணர்ந்து கொள்ளும்படி அவர்களின்நடத்தை கண்டிக்கப்பட வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு உலகில் நியாயமான உரிமைகள் கிடைப்பதற்கான கொள்கை யொன்றையும் ஏற்படுத்த வேண்டும்.

வறியவர்களுக்குத் தேநீர்

மேயரின் நன்கொடை

கொழும்பு மேயரான டாக்டர் ஆர். சரவணமுத்து இலங்கையிலுள்ள இரட்சணிய சேனைகளுக்குத் தேநீர் மோட்டார் வாகனமொன்றை உதவியோக தேவையில நன்கொடையாக வழங்கியிருக்கிறார்.

குறித்த தேநீர் மோட்டார் வாகனம் தேவைப்படும் பொழுது வறிய ஜனங்களிடையே வேலை செய்வதற்கு உபயோகிக்கப்படும்.

மேனுடுகளில கஷ்டமான சமயங்களில இரட்சணிய சேனை அதிகாரிகளால நடத்தப்படும உணவு விநியோக மோட்டார் வாகனங்களையும் தேநீர் மோட்டார் வாகனங்களையும் சர்வ சாதாரணமாகக் காணலாம். மேயர் நன்கொடை யளித்துள்ள தேநீர் மோட்டார் வாகனத்திற்கு மேயரின நிதியிலிருந்து பணம் செலவிடப்பட்டது. நன்கொடையைப் பெற்றவர்கள் அதைப் பெரிதும் வரவேற்கின்றனர்.

தஞ்சையில் கள்ளத்தனமாக நெல் ஏற்றுமதி

'தடுப்பதற்கு அதிகாரி உத்தரவு

தஞ்சை அக் 14

தஞ்சை ஜில்லாவிலிருந்து ஏராளமான நெல் அரிசி இவைகள் கள்ளத் தனமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதைத் தடுக்கத் தஞ்சை ஜில்லா அதிகாரி கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். கள்ளத் தனமாக நடைபெறும இந்த ஏற்றுமதிக்குக் காரணமாயுள்ள யாழ்ப்பாணத்தவர்களை 3 தினங்களுக்குள் வெளியேறும்படி எச்சரிக்கை செய்திருக்கிறார். அதன் பயனுக ஏறக்குறைய 400 பேர்களுக்கு மேல ஏற்கனவே வெளியேறி விட்டனர். யாழ்ப்பாணத்தவர்களில் சாப்பாட்டுக்கு வழியில்லாதவர்களையும் மேற்படி குற்றங்களைச் செய்வதற்காக ஒளிந்திருப்பவர்களையும் இ. பி. கோ. 109 வது பிரிவின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள உத்தரவிட்டிருக்கிறார். வெளியேறுமல இந்தப் பகுதியிலிருக்கும் ஏறக்குறைய 800 யாழ்ப்பாணமக்களை இன்னும் ஒரு வாரத்திற்குள் வெளியேற்றி விடுவார்களெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணப் பட்டின சங்கம்

[இச்சங்கத்தின் புதிய தலைவர் இப் பத்திரிகை நிருபருக்குத் தெரிவித்தவை:-]

"வருவாயிலும் சுற்றளவிலும் இலங்கையின் இரண்டாம் பட்டினமாகத் திகழும் யாழ்ப்பாணத்தின் இவ்வளவு காலமும் பல குறைகள் தெப்பம் போல் மிதந்து கிடக்கின்றன.

1 கரையூர் வாசிகளின் நிலைமை பரிதபிக்கத் தக்கது. குந்தியிருக்க நிலமில்லை; குடிக்கத் தண்ணீர் இல்லை, ரோட்டுகள் சரியில்லை. நகரசங்கம் ஸ்தாபிக்கப்பட்டு இருபது வருடங்களாகியும் இப்பகுதியின் குறைவுகள் திருந்தே யிருக்கின்றன. அவைகளை நிவிர்த்தி பண்ண வேண்டியது நகரசபையின் முதற் கடனாகும். நெருக்கமான பகுதிகளில் நல்ல கிணறுகளுமில்லை. அவ்விடத்திலுள்ள வாசிகளின் தேகமும் தண்ணீரும் ஒன்றையொன்று சந்திக்காமலும் அநேக நாட்கள் கழிகின்றன.

2 குளங்களும் வாய்க்கால்களும் மற்றும் நீர்நிலைகளும் மதகுகளும் மண்ணால் நிரவப்பட்டிருத்தலால் வெள்ளம் கடலுக்கோ, மற்றும் நீர்நிலைகளுக்கோ ஓடாமல் தடைபட்டு நின்று வளவுகள் வயல்களூடு சென்று குடிசனங்களுக்கு இடைஞ்சலையும் பொருட்சேதத்தையும் உண்டாக்குகின்றது.

3 சுகாதார முறையில்:- வாய்க்கால்கள் குளங்கள் துர்மணக் களஞ்சியங்களா யிருக்கின்றன.

4 வண்ணார் அழுக்குப் புடவைகளை அவைகளிலுள்ள அழுக்கிலும் கூடியதும், தொற்று நோய்களுக்குக் காரணமான கிருமிகள் நிறைந்ததுமான நீர்நிலைகளில் தப்புரவு செய்து தூய்மைப்படுத்தி வருகிறார்களென்பது எல்லாரும் துன்பத்துடன் அறியக் கிடக்கின்றது.

5 இப்பட்டினத்தில் நெருக்கமான இடங்களில் வதிய சிறுவர்களின் தேக அப்பியாசத்துக்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு விளையாட்டு நிலமும் தூயகாற்றைச் சுவாசிக்கவும் மனக் கிளர்ச்சியை உண்டாக்கவும் பூச்செடிகளாற் சூழப்பட்ட வெளிநிலமும் அதனோடு சேர்த்து வாசிகசாலையும் அத்தியாவசியமானவை யாகும்.

6 அநேக சனங்கள் மலிவாகவும் அன்றேல் இலவசமாகவும், வசதியாகவும் சிகிச்சை பெறக்கூடிய 'ஆயர்வேத வைத்தியசாலைகள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று இன்றைக்கு எட்டு வருஷங்களுக்கு முன் நகரசங்கத்தில் ஒரு பிரேரணை நிறைவேறி யிருந்தும் அவ் விஷயம் இன்னும் ஆரம்பமாகவில்லை. அதைப்பற்றிச் கருதிப்பாருமில்லை.

இன்னும் பல குறைவுகளும் செய்ய வேண்டிய திருத்தங்களும் இருப்பினும் மேலே காட்டிய விஷயங்கள் முக்கியமானவை எனலாம். இவைகளில் முதல் நான்கும் அரசினர் உதவியுடன் நகரசங்கம் கூடிய சீக்கிரத்தில் செய்து முடிக்க வேண்டிய கருமங்களாம். கடைசி இரண்டு விஷயங்களையும் செய்து முடிக்க நகர சங்கத்தில் பணம் [illegible] நகர எல்லைவாசிகளிலோ அல்லது நகரத்தில உரிமை அபிமானம் உள்ளவர்களிலோ மனச் செல்வம் பொருட் செல்வம் இரண்டும் ஒப்ப நிறைந்த பெரியார் சிலர் முன்வந்து முற்கூறிய குறைவுகளை நிவர்த்திபண்ணி இம்மாபெரும் புண்ணியத் தொண்டை ஆற்றுவார்களென்று பிரார்த்திக்கிறேன். அப் பெரியார் முன்வராவிட்டாலும் நானும் வேறுசில நண்பர்களும் அவர்களைத் தேடி எடுத்து தரிசித்து அவர்கள் உதவியைப் பெற்று மேற்படி தொண்டுகளை ஆற்றுவோமென்று துணிகிறேன். இறைவன் அருள்புரிவாராக."

ஆக்கின்லெக் இந்தியா திரும்பினுர்

பர்மாமீது நேசதேசநடவடிக்கைக்கு அறிகுறி

நியூயார்க் அக் 18

ஜெனரல் வேவல ஜெனரல் ஆக்கின்லெக் ஜெனரல் ஸ்டில்வெல் ஆகியோர் புதுடில்லிக்கு வந்து சேர்ந்திருப்பதானது நேசதேசங்கள பர்மாமீது படையெடுக்கப் போகின்றன வென்பதை முன்னதாக அறிவிக்கிறது என்று நேற்றிரவு றேடியோவில வியாக்கியானம் செய்யப் பட்டது.

ஜெனரல் ஆக்கின்லெக்கும் லேடி ஆக்கின் லெக்கும் டில்லியில வைஸ்ராயுடன் தங்கியிருக்கின்றனர்.

எதிரி றேடியோ செய்தியைக் கேட்பவருக்குத் தண்டனை

ஜான்ஸியில் நடவடிக்கை

ஜான்ஸி, அக், 15—

ஜான்ஸியில் விரோதி றேடியோச் செய்திகளைக் கேட்டதற்காக 9பேர்களின்றேடியோ லைசென்ஸ் பறிமுதல் செய்யப்பட்டது. ஜில்லா மாஜிஸ்திரேட் உத்தரவுப்படி பொலீஸார் இந்த லைசென்ஸ்களை நீக்கிவிட்டார்கள்.

பொலிஸ்உத்தியோகத்தருக்குக் கடுங்காவல்

வார்தா, அக், 16—

15 வருஷம் பொலிஸ் ஊழியம் செய்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தமது வேலையை ராஜினாமாச் செய்ததற்காகப் பொலீஸ் சட்டப்படியும் 'கட்டாய சர்விஸ்' அவசரச்சட்டப்படியும் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

புனாவில் ஒரு பொலிஸ்காரர் லீவு எடுத்துக்கொள்ளாமல் வேலைக்கு வராமல் நின்று விட்டார். என்பதற்காக இரண்டுமாதக் கடுங்காவல் தண்டனையும் 50 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

—சுதேசமித்திரன்

சுரங்கத்தொழிலாளர் குறை

அரிசி விநியோக அளவை அதிகரிக்கவேண்டுமாம்

சுரங்கத் தொழிலாளர்களுக்கு இப்பொழுது அளிக்கப்பட்டுவரும் கூப்பன் அரிசி போதாதென்றும் அரிசி அதிகமாகக் கொடுக்கவேண்டியதவசியமென்றும் அதிகாரிகளுக்கு விண்ணப்பங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

சுரங்கவேலை மிகவும் கஷ்டமான வேலையென்றும் இப்பொழுது கொடுக்கப்பட்டுவரும் கூப்பன் அரிசியைக்கொண்டு வேலைசெய்வது சுரங்கத்தொழிலாளர்களுக்கு மிகவும்கஷ்டமாகவிருக்கின்றதென்றும் கூறப்படுகிறது. கூப்பன் அரிசி அதிகப்படுத்தப்படாவிட்டால் சுரங்கத் தொழில் மிகவும் பாதிக்கக்கூடுமென்று சொல்லப்படுகிறது.

இவ்விஷயம் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளைச் சேர்ந்ததாகையால் தொழில் மந்திரிக்கு விண்ணப்பஞ்செய்ய முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

பதிவுசெய்யப்படாத கையிருப்புகள்

வியாபாரிகளும் விலைகட்டுப்படுத்தப்பட்ட பொருட்களும்

விலைகட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கும் பொருட்களைவிற்பனை செய்யும் மொத்தவியாபாரிகள் சமீபத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட புதிய விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் தங்கள் ஸ்டோர்களையும் கையிருப்பையும் பதிவு செய்துகொள்ளவேண்டும். ஆனால் அம்மாதிரிப் பதிவு செய்துகொள்ள வேண்டிய காலத்தை நீடித்தபோதிலும் மொத்த வியாபாரிகள் சீக்கிரமாக அம்மாதிரிச்செய்ய முன்வரவில்லையென்று தெரிகிறது.

அதனால் விலைக்கட்டுப்பாடு அதிகாரிகள் சீக்கிரத்தில் வழக்குகள் தொடரத் தீர்மானித்திருக்கிறார்கள். பதிவு செய்யத் தவறினால் பதிவு செய்யப்படாத ஸ்டோர்கள் கைப்பற்றப்படலாம்.

உ

விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடமேற்கில் "தோப்பு அடைப்பு" என்னும் காணியில் எழுந்தருளி யிருக்கும் விசுவேசப்பிள்ளையார் கோவிலின் பரிபாலன சபையின் குறை நிறைவுகளையும் இன்னும் கோவிலின் நன்மைக்குரிய விஷயங்களைப் பற்றியும் வேண்டிய ஆலோசனைகள் செய்யும் வண்ணம் 1942.ம் ஆ ஐப்பசி மீ 25 உ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணி வரையில் ஷை கோவில் வீதியில் ஒருசபை கூட்டப்படும். அத்தருணம் ஷை கோவில் வழிபாடுகாரர் எல்லோரும் சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இ சிவகுருநாதர்
து அண்ணாமலை
அ வைத்திலிங்கம்
சி ஐயம்பிள்ளை
க முருகேசு
இ நாகலிங்கம்
இ இராசரத்தினம்
வ ஆறுமுகம்பிள்ளை
பொ இராசையா
தா நவரெத்தினம்
இ கனகசபாபதி
அ சி முத்துக்குமாரு
வே தாமோதரம்பிள்ளை
செ கனகரெத்தினம்
வே உமாபதி
வெ ஆறுமுகசாமி
நி செல்வத்துரை
ச சண்முகம்
ம சிவப்பிரகாசம்
S. Subramaniam
வண்ணார்பண்ணை, 16.10.42.

செ சிவசோதி
ம தம்பியப்பாபிள்ளை
P. S. A. Rasiah
சு சிவசுப்ரமணியம்
N. Mylvaganam
ம நாகராசா
S. Sinnatamby
பொ செல்லத்துரை
சு இராமலிங்கம்
மு நாகரெத்தினம்
K. Mailvaganam
M. Nadarajah
சி செல்லத்துரை
V. Chinnatamby
செ சிற்றம்பலம்
K. Nadarajah
S. Subramaniam
R. M. Coomaraswamy
மு கணபதிப்பிள்ளை

கோவில் மகாசபை அங்கத்தினர்.

Mis 135 22.10.42

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் பழ. சோம. சோமசுந்தரஞ்செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

தி.	நம்.	ரூ.	ஊர். பெயர். நகை விபரம்.
1938ம் ஆண்டு யூலை மாசம்			
5	3541	40	ஐயனார்கோவிலடி மாணிக்கம் செல்லத்துரை சிறு தடைக் காப்பு சோடி 1
செப்டம்பர் மாசம்			
5	3651	190	மயிலிட்டி வேலுப்பிள்ளை வல்லிபுரம் கழுத்துச் செயின் 3ம் புரோச் 1ம் கொ. முகப்பு 1ம்
21	3706	70	வேலணைமேற்கு சின்னையா கந்தையா கழுத்துச் செயின் 1
நவம்பர்மாசம்			
13	3828	7	வண்கிழக்கு மாரிமுத்து தருமலிங்கம் சிறுமோதிரம் 3
1939ம் ஆண்டு ஜனவரிமாசம்			
15	3962	10	வண்கிழக்கு ஆறுமுகம் மயில்வாகனம் ஆடுதன் பென்டன் 1
21	3978	7	வண்கிழக்கு நாகநாதர் அண்ணாமலை இமிகல் மோதிரம் 1
பெப்ரவரி மாசம்			
6	4019	20	வட்டுக்கோட்டை சுப்பையா மாணிக்கம் கைச்சங்கிலி 1
28	4066	20	நீராவியடி கந்தையா நாகரத்தினம் சாதாமோதிரம் 1
செப்டம்பர் மாசம்			
23	4439	40	வண்மேற்கு மா. வன்னியசிங்கம் பூ வளையல் சோடி 1
1941ம் ஆண்டு ஜனவரிமாசம்			
20	4980	10	வண்மேற்கு முத்துச்சாமி அளகர்சாமி தடை சோடி 1
பெப்ரவரி மாசம்			
6	5001	12	தெல்லிப்பளை வீரகத்தி நாகமுத்து இமிகல் பதக்கம் 1
யூன் மாசம்			
28	5100	12	கோண்டாவில் நாகலிங்கம் அப்புத்துரை சாதா மோதிரம் 1

விற்பனவு நிகழும் சித்திரபானுவருஷம் ஐப்பசிமாசம் 21.ந்தேதி (6.11.42) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் [illegible] மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை,
வெந்தீஸ் மேஸ்தர்,

(Mis. 137. 22 & 26.10.42)

வெள்ளி விலை ரூ. 107

சென்ற 20 வருஷங்களாகக் காணப்படாத விலை

சென்னை அக் 18—

சென்ற சிலதினங்களாக வெள்ளி விலை மிகவும் அதிகரித்து வருகிறது. தற்போதைய விலைகள் சென்ற 30 வருஷங்களில் காணப்படவில்லை. சென்றவார இறுதியில் வெள்ளிவிலை ரூ 97 ஆக இருந்தது. இப்பொழுது இது 107-க்கு அதிகரித்திருக்கிறது. ஐந்தாம் ஜோர்ஜ் ஆறுவது ஜோர்ஜ் ரூபாய், அரை ரூபாய் நாணயங்களை இந்திய அரசாங்கச் செலவாணியிலிருந்து நீக்கிவிடுவதே இதன் காரணமாகும். இந்த நாணயங்கள் 12 ல 11 பாகம் நல்லவெள்ளி கொண்டதாகும். அடுத்த மே மாதம் 1-ந் திகதி திருப்பி எடுக்கும் உத்தரவு நடைமுறைக்கு வரும். ஏற்கனவே விக்டோரியா ஏழாவது எட்வேட் சக்ரவர்த்தி ரூபாய் அரைரூபாய் நாணயங்களும் திருப்பிப் பெறப்பட்டிருக்கின்றன. ஆகையால் அடுத்த மேமாதத்துடன் 12 ல 11 பாகம் நல்லவெள்ளி கொண்ட நாணயங்கள் எல்லாம் செலவாணியிலிருந்து திருப்பப் பெறப்படுகிறது.

மேற்படி உத்தரவு விலைகள் அதிகரிக்கக் கூடிய ஒரு செய்தியாக மார்க்கெட்டில் கருதப்படுகிறது. சமீபகாலமாக இந்திய அரசினர் பம்பாயிலும் லண்டனிலும் வெள்ளி விற்பனை செய்தது காரணமாக இந்திய அரசினரின் வெள்ளி இருப்புக் குறைந்து விட்டது. ஆகையால் அரசினர் மேற்படி நாணயங்களைத் திரும்பப் பெற்று அவற்றை உருக்கி வெள்ளி இருப்பை அதிகரித்துக் கொள்ள விரும்புகின்றனர், என்று மார்க்கெட்டில அபிப்பிராயம் இருந்துவருகிறது. சென்ற செப்டம்பர் மாதம் 8 தேதி முதல் ரிஸர்வ் வங்கி வெள்ளி விற்பனையை நிறுத்திக் கொண்டிருப்பது மேற்படி அபிப்பிராயத்தை வலுப்படுத்தியிருக்கிறது.

வெள்ளியில் நடக்கும் சட்டா வியாபாரத்தை ஒடுக்கச் சென்ற டிசம்பர் மாதத்திலிருந்து ரிஸர்வ் வங்கி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட பலனை அளிக்கவில்லை யாகையால ரிஸர்வ் வங்கி மறுபடியும் வெள்ளி விற்பனையில் இறங்கா தென்று மார்க்கெட்டில் ஒரு அபிப்பிராயம இருந்து வருகிறது.

ஆனல் மேற்படி நாணயங்கள் திரும்பப் பெறப்பட்ட பிறகு இருப்பு மிகவும் அதிகமாக இருக்குமாதலால் வங்கி விற்பனை செய்யலாமென்றும் மற்றொரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. எது எப்படியாயினும் மார்க்கெட் ஒரே மேல் நோக்கமாக இருந்து வருகிறது. பொதுஜனத் தேவைகள் அதிகமாக இருக்கிறது. சேர்த்து வைப்பதற்காகவும் வாங்கப்படுவதாகத் தெரிகிறது. சென்ற சில தினங்களில் நல்ல வியாபாரம் நடந்திருக்கிறது.

ரிஸர்வ் பங்கியில் இருப்பில் இருக்கும் ரூபாய் நாணயம் சென்ற சில வாரங்களாகக் குறைந்து வருகிறது. இந்த நிலைமை நீடித்தால ஏற்கனவே தயாராகவுள்ள இரண்டு ரூபாய் நோட்டுக்களை வங்கி வெளியிட்டுவிடு மென்றும் நம்பப்படுகிறது.

கொழும்பு விவேகானந்த சபை அகில இலங்கைச் சைவ சமயபாடப் பரீக்ஷைகள்

ஷை சபையாரால் நடத்தப் பெறுவரும் சமயபாடப் பரீக்ஷைகள் சென்ற சித்திரை மாதத்தில், யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட சில வசதியீனங்களினுல நடைபெறவில்லை.

அப்பரீக்ஷைகளை நிகழும் சித்திரபானு ஷூ மார்கழிமாதம் ௧௧-ந் தேதி சனிக்கிழமை (27-12-42) நடாத்துவதற்கு ஷை சபையின் நிர்வாகசபையார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால இதுவரையில் விண்ணப்பப்பத்திரங்களனுப்பாத பாடசாலைகள் அக்டோபர் மாசம் 31-ந் தேதிக்குமுன் தங்கள் விண்ணப்பப்பத்திரங்களைப் பரீக்ஷைக் காரியதரிசிக்கு அனுப்பி வைப்பார்களாக.

இங்ஙனம்
பரீக்ஷைக்காரியதரிசி
விவேகானந்தசபை

கொழும்பு
14-10-42

திருச்சி றேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

வெள்ளி அக்டோபர் 23

காலை 7-45 ஆரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8-00 துதிப்பாடல் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 எம். கனகசபைப் பிள்ளை பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1.00 திரைகானம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம். கனகசபை பிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 கே. வி. கேசவ பாகவதர் பாட்டு 5-40 நான்-ஒ-ஷிப் 6-00 எ. பி. சின்னதம்பி பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் திருநீலகண்டர் சரிதை 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 புதுவீடு 8-எ-பி. சின்னதம்பி பிள்ளை நாகஸ்வரம் 8-45 கே. வி. கேசவபாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலகவிவகாரங்கள் 10-00 கதம்பம் † 10-30 ஒலிபரப்பு முடிவு.

சனி அக்டோபர் 24

காலை 7.45 ஆரம்பம் † 7-50 தமிழில் செய்திகல் 8-00 திருப்புகழ் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஜி. ஸ்ரீநிவாசன் வயலின் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 கே. வி. தியாகராஜன் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பிய சங்கீதம் † 2-00 தமிழில் செய்திகள் 2-05ஜி. ஸ்ரீனிவாசன்வயலின் 2-30ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 கே. வி. தியாகராஜன் பாட்டு 5-40 திருவிசைப்பா விளக்கம் 6-00 டாக்கீ இசை † 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 [illegible] பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7.45 மதுரைமணி ஐயர் பாட்டு 9-00 [illegible] 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9.30 லண்டனிலிருந்துசெய்திகள் 945 மனுநாடக வீணை 10-00 இடைவேளை 10-30 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு அக்டோபர் 25

காலை 7.45 ஆரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8-00 ஞானசேகரன் ஜோலப் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 எஸ். சுந்தரம் பாட்டு 9.00 ஒலிபரப்பு முடிவு.

12.00 டாக்கீ கீதம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ். சுந்தரம் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கதம்பம் † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 உமையாள்புரம் ஜி. கலியாண ராமையர் பாட்டு 5-40 தேவாரதனை 6-00 எம். ஆர். சியாமளாதேவி வீணை பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 எங்கள் தபால் பெட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 உமையாள்புரம் ஜி. கலியாணராமய்யர் பாட்டு 8-30 எம். ஆர். சியாமளாதேவி 9-00 சர்வகலாசாலைகளுக்கு 9-15 ஐரோப்பிய சங்கீதம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஆ. இ. Gr. வித்வான் வயலின் 10-00 இசைவேளை † 10-30 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் அக்டோபர் 26

காலை 7-45 ஆரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8-00 திரைகானம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 எஸ். பாலசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 டாக்கி கீதம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 அரியக்குடி ராகவ ஐயங்கார் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2 30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 எஸ். பாலசுந்தரம் சகோதரர்கள்நாகஸ்வரம் 5-45 இசைப் பயிற்சி 6-அரியக்குடி ராகவஐயங்கார்பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7.15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7.45 சித்தர் பாடல் 8-00 டி. ஆர். மகாலிங்கம் புல்லாங்குழல் [illegible] முத்துச்சாமி ஐயர் வயலின் என். கணேசையர் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இரு வாத்ய இசை 10-00 கதம்பம் † 10-30 ஒலிபரப்பு முடிவு.

சிவஞானபோத விரிவுரை

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

ம்புமாலை யணிதல் முதலிய ஒழுக்கங்களில் வழுவாதொழுகினவர் கட்டற்றவராவர். அங்ஙனம் கட்டற்றவருக்குச் சிவனோடு சமமாக எல்லாப் பண்புகளும் பூக்கும்.

௯. காபாலம்:— ஆவிகளின் இயல்பும் கட்டினியல்பும் மாவிரதர் கொண்டவாறேயாம். நான்முறையே தீக்கை பெற்றுப் பச்சைக் கொடி போன்ற கைக்கொண்டு காடோறும் மார்தர் தலையோட்டில் ஐயமேற்றுண்பவர் கட்டற்றவராய்ச், சிவன் ஏறலால் (ஏறல்—ஆவேசித்தல்) சிவனது எல்லாப் பண்புகளையும் பெற்றுச் சிவசமமாவர். இம்மூவரும் முறையே, பற்றல், மூழ்த்தல், ஏறல் என்னும் கொள்கையையுடையவர். அதனுல் இவர்கள் பற்றகோளினர், மூழ்த்தற்கோளினர் ஏறற்கோளினர் என்று அழைக்கப்படுவர். சங்கிராந்தசமவாதி, உற்பத்திசமவாதி, ஆவேசசமவாதி இம்முக்கோளினையும் செய்தார். முறையே வாலமருள், அறிவு, காலம் என்னும் மூன்று மெய்களின் வைகும் சிவர் (சிவர்—உருத்திரர்) மூவர் எனக் கொள்க.

௬. வாமம்:— பாற்கரியன் கூறியவாறே அறிவில்லதும் அறிவுள்ளதுமாகிய அனைத்துலகமும் ஆற்றலின் திரிபே. (ஆற்றல்-சத்தி) வாமநூலில் விதித்த முறையே ஒழுகி ஆற்றலில் ஒடுங்குதலே வீடு. இந்நூல் செய்தார் சித்தர். ஆற்றல் மெய்யினுள்ள ஓராவியாற் செயப்பட்டது சத்தசாத்தம என்றறிக.

இ. வைரவம்:— பெரும்பாலும் காமக்கொள்கையுடன் ஒத்துச் சிறுபான்மை ஒழுக்கங்களான் வேறுபட்டு வயிரவனை முழுமுதற் பொருளெனக் கொண்டு அவ்வயிரவன் நிலையைச் சேர்வதே வீடு.

௯. ஐக்கியவாதசைவம்:— ஆவிகள்பல; கடவுளொன்று. இருளாகிய பழமலம் இன்று. மருள், வினையுண்டு. கடவுள் பல ஆவிகளும் செய்துகொண்ட வினைக்கீடாக அவ்வவ் ஆவிகளுக்குத் தக்க உடல், கலன், நிலன் (தனு கரணம் புவனம்) மூன்றையும் அருளுகின்றனர். இம்மூன்றினையும் சார்ந்த ஆவிகள் இருவினைப்பயனையும் நுகரும். இந்நுகர்வினும், வினையீட்டத்திலும் ஆவிகளுக்கு முனைப்பட்டுக் கருத்தில் விருப்பு வெறுப்பு இன்றி ஒத்த நோக்கம் உண்டாவதே இருவினை ஒப்பாம். அங்ஙனமாகிய இருவினையொப்பு வரக் கடவுள் திருவருளால் எல்லாம் அழித்திடுவன். அங்ஙனம் அழிகவே மருள் வினையாகிய அழுக்குப்பற்று அவைபற்று தொழிபவே ஆவிகள் முன்புள்ள வகரொளியே பெற்றிடும்.

மெய்கண்டார் தம் திருவாய் மொழியால் மறுக்கின்ற கொள்கை ஒன்பதாகும். அவை மூன்றுவது நூற்பாவில் சொல்லிய நனிய காணப்படுகின்ற இவ்வுடலகத்து இவ்வுடலுக்கு வேறாய் உயிருண்டு எனக் காட்டியருளும் எழுவகை ஏதுக்களும், நான்காவது நூற்பாவில் காட்டியருளும் அக்கலனுக்கு வேறாய் உயிருண்டு என்னும் ஏதுவும், முதனூற்பாவில் எடுத்துக்காட்டில் "அந்தியும் ஆதியும் ஆம்" என்னும் ஏதுவும் ஆகும். இனி "அந்தியும் ஆதியும்" என்பதன்கணுள்ள ஆதியொன்றுகவும், ஆறுவது நூற்பா எடுத்துக்காட்டில் "பாவகத்தைப் பாவித்தல்" என்பதனுலிபோக பாவனையொன்றுவும் எடுத்து மறுத்ததாகவும் கொள்க. இவையேயன்றி வேறுகொள்கைப் பெயரால் எவரையும் மறுக்காமை தம் பொதுக்கொள்கை விரித்த பெருநோக்கமுள்ள தென்பதும், நாயனார் திருக்குறள் போன்ற பாவருக் கற்று நலனெய்த வேண்டுமென்னும் நன்னோக்கமுமேயாம். அவ்வொன்பது கொள்கைகளும் முறையே பாழ், உடல், புலன், கலன், கனவு, உயிர்ப்பு, உணர்வு, குழு, காப்புத் தெய்வம் என்ப. செம்பொருட்டுணிவினர் தம் பெருமக்கள் முக்கூற்றுப் புறச்சமயமும் அகச்சமயமும் ஐயந்திரிபின்றி புணர்த்து இம்மெடுப்பிலாத பீடுடைய மெய்கண்ட நெறியாகிய சைவசித்தாந்தத்தின் வாய்மையும் தூய்மையும் எவ்வா நெறியினையும் தனக்கு உறுப்பாகக் கொண்டுதான் உறுப்பியாக நின்று விளங்குகின்ற தென்னும் உண்மையும் துணிதற்கேயாம். அவ்வாறன்றிப் பிற நெறியினரோடு வழக்கிட்டு அவர்களைப் பகைத்து அவர்கள் நோவும்படி செய்து அவர்களை வேறுபடுத்தற்கு அன்று என்க. எல்லாரோடும் அளவளாவுதலும் அவர்கள் கொள்கைகளை வலிய மறுத்துரையாமையும் ஆகிய இரண்டுமே மெய்கண்ட நெறியின் இரு கண்கள் என்க. அவ்வந்நெறியினுள்ளார் திருவருள்வலத்தால் தத்தம் கொள்கையில் ஐயுற்று மெய்கண்ட நெறியினரை உண்மை வினவுவரேல் அவ்வவருக்குமாறு உண்மையுரைத்து அவர்களை நன்னெறியில் நிலைபெறச் செய்வதே மெய்கண்ட நெறியினர் கடமை என்க. இக்கருத்தினை ஒரு வெண்பாவின்கண் வரைகின்றேன்.

போக்கிங் கொருவரையும் பொய்க்கும் புகலாத
மீக்கோள் நெறியினராம் மெய்கண்டார்—தாக்குறுமா
தம்பெரு மக்கள் தகைவிலுறக் கோளுணர்த்து
செம்பொருட் சேர்வுறவாம் செப்பு.

போக்கு—குற்றம்; பொய்க்கும்-விளையாட்டுக்கும்; மீக்கோள் - மேலான கொள்கை. மெய்கண்டார்-சித்தாந்த நெறியினர். பெருமக்கள்-சைவர்கள். செம்பொருட் சேர்வு-சித்தாந்தச் சார்பு. இனி, அன்பு அறிவு ஆற்றலாம கடவுளின் திருவடிக்கலப்புமாம்.

மெய்கண்டார் நூல், இரண்டு பாலாகவும் (பால்-அதிகாரம்) நான்கியலாகவும், முப்பத்தொன்பது கூறாகவும் பகுக்கப்பெற்றுளது. (கூறு-அதிகரணம்) அவற்றுள் முதற்பால் பொதுவெனப்படும்; இரண்டாவது பால் உண்மை எனப்படும். (உண்மை—சிறப்பு) பொது என்பது முப்பொருளையும் சார்பானுணர்வது. அஃதாவது விரிந்த உலகச் சார்பால் உடையானுகிய கடவுளை யுணர்தலும், உடம்பின சார்பால் அடிமையாகிய ஆவியை யுணர்தலும், காணப்படும் உலகு உடம்பு இரண்டினையும் கொண்டு உடையான அடிமையென்கின்ற தானே விளங்கும் அன்பு அறிவு ஆற்றலுள்ளதும் விளக்க விளங்கும் அன்பறிவாற்றலுள்ளதுமாகிய இரு பொருள்களை புணர்வதும், காணப்படும் உலகு உடல் தோன்றிநின் றழிவதால் இவை செயப்படுபொருளெனவும், இவற்றிற்கு முதலாக அழிவிலதாய் அறிவிலதாயுள்ள மருள் ஒன்று உண்டென்றும், இம்மருளின் செயலாகிய உடல், கலன், நிலன், துய்ப்பு நான்கும் ஆவிகளுக்கு வினைக்கீடாக வருவன என்றும், அவ்வினைதானும் ஆவியைப் பண்டேமறைக்கும் இருளாற்றலின் வன்மை மென்மைகளுக்குத் தக்கவாறு வேறுபடுமென்றும், அதனுல் அவ்வினை நிகழ்ச்சிக்கு முதலாய் வினைத்தன்மை யென்னும் மூலவினை ஒன்று உண்டென்றும் உணர்வது. மூலவினை யொன்று உண்டென்னுங் கொள்கை (தொடரும்)

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா
25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
சேமமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(வி) (Y. 164. 1-11-41 to 31-10-42)

பத்திரக் கிரயம்
1942-ம் ஆண்டு எப்பிறில் மாதத் தொடக்கமாக
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்
தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்
சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச்
சிறிது உயர்த்தியுள்ளார்:-

இந்துசாதனம் தமிழ்ப்பிரதி,	வருடமொன்றிற்கு	பட்டின எல்லையுள்	6.50
ஆங்கிலப்பிரதி	"	"	6.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	"	"	10.50
தமிழ்ப்பிரதி	"	பிறவூர்கட்கு	9.50
ஆங்கிலப்பிரதி	"	"	9.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	"	"	13.50

தனிப்பிரதி 7 சதம்

வேதாகம சைவசித்தாந்தமும் தனித்தமிழ்ச் சைவசித்தாந்தமும்

1ம் பக்கத் தொடர்ச்சி

ஞர். பிரம சூத்திரபாஷியங்களை ஒருசிறிதாயினும் படித்திருப்பாராயின் இப்போலி முடிபுகளை வைத்துக்கொண்டு மகிழ்ச்சிகொள்ள மாட்டார். அஃதாமாறு சிறிது காட்டுதும்.

பாஷியகாரரனைவரும் தங்கள் தங்கள் சமயக்கொள்கைகளைப் பிரமசூத்திரத்திற்கண முயன்றுதத்தம் கருத்திற்கேற்பச் சூத்திரங்களையீர்த்துப் பொருள்கண்டார்களேயன்றிப் பிரமசூத்திரத்திலிருந்து சமயக்கொள்கைகளைப் பெற்றுக்கொண்டாரொருவருமில்லை. சூத்திரங்களையீர்த்துச் சிதைப்பதில் சங்கரர் மகாசமர்த்தர் என்பது அவரது அவரதுபாஷியத்தைப் படிப்போரறிவர். கடவுள் உலகிற்கு முதற்காரணரேயன்றி நிமித்தகாரணரன்றென்பது சங்கரரது கருத்தேயன்றிப் பிரம சூத்திரத்தின் கருத்தன்று. இராமானுஜர் மத்துவர் முதலிய மற்றைப் பாஷியகாரரனைவரும் சங்கரரது கருத்தையுடன்படாது மறுத்து கடவுள் உலகிற்கு நிமித்தகாரணர் என்றுகொண்டே அந்நூலுக்கு உரை வகுத்தனர். நாம் மேற்கூறிய அனைத்தும் உண்மையே என்பதற்குச் சூத்திரபாஷியங்களிலிருந்து உதாரணங்கள் எடுத்துக் காட்டுவோம்.

(வரும்)

கொள்ளைக்குத் தண்டனை மரணம்

'கொள்ளைக்குத் தண்டனை மரணம்' என்பதைப் பொதுஜனங்கள் மனதில் தெளிவாக அறிந்துகொண்டதாகக் காணப்படவில்லை. சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒருவழக்கு விசாரணையின் போது நீதவான் திரு. ஓ. எல். டி. கிறற்சர் கொள்ளையடித்தவர்கள் பின்வரும் இரு காரணங்களினுல் மரண தண்டனைக்குத் தப்பிக் கொண்டதாக அறிவித்தார்.

(1) இவ்வகையான குற்றச்சாட்டுக்களில் இதுதான் முதல் குற்றச்சாட்டாயிருப்ப தொன்று.

(2) "கொள்ளைக்குத் தண்டனை மரணம்" என்பதைப் பொதுஜனங்கள் தென்னத் தெளிய அறிந்துகொள்ளவும், கொள்ளைக் குற்றம் எவ்வளவு பாரதூரமான தென்பதை விளக்கவும் கூடிய முறையில விளம்பரங்கள் போடப்பட வில்லை யென்பது மற்றது.

அவசரகாலச் சட்டத்தின்படி 'கொள்ளைக்குத் தண்டனை மரணம்' என்ற சட்டமானது யுத்த காலத்தில் ஏற்படக் கூடிய நெருக்கடியான தருணத்தில் கொள்ளையடிக்க முயற்சிப்போரை எச்சரித்துத் தடுக்கும் முகமாய் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின் கீழ் முதலாவதாக ஏற்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பன்னிருவரில் அறுவர் ஆயுட்காலச் சிட்சை பெற்றனர்.

இந்தக் கொள்ளை விமானத்தாக்குதலேற்பட்ட ஈஸ்டர் ஞாயிறன்று ஏற்பட்டதாகும். அதிகாரிகள் வேறு முக்கியமான அலுவல்களில் ஈடுபட்டிருக்கும்போது அத்தருணத்தைச் சம்பந்தமாகக் கொண்டு கொழும்பிலுள்ள ஒரு கொள்ளைக் கூட்டத்தார் இறக்குமதியாவதற்குப் படகுகளில் ஆயத்தமாய் இருந்த சில பொருள்களைத் திருடினர்கள்.

இக்கூட்டத்தார் கொள்ளையடித்தவை உணவுப் பொருட்கள், விலையுயர்ந்த உடுப்புத் துணிகள் முதலியனவாகும்.

இக்கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவனுல் உபத்திரவிக்கப்பட்ட ஓர் சிறுவன் கொடுத்த தகவலின் பயனுகவே மாத ஆரம்பத்தில் களவாடப்பட்ட பொருட்களில் பெரும்பாகம் கொழும்பிலும் கண்டியிலும் அகப்பட்டன.

கடைசியாக விசாரணைக்குக் கொண்டு வரப்பட்ட குற்றவாளிகள் பன்னிருவரும் ஒரே அபாயகரமான கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனக் காணப்பட்டனர். அவர்களை கிரிமினல் இன்ஸ்பெக்டர் திரு.இயர் அலியின் கடும் பிரயாசத்தின் பயனுல் கைது செய்ய முடிந்தது.

சேவை நலம் பாராட்டல்

சென்ற (5-10-42) திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் வேலணை நடராஜ வித்தியாலய மண்டபத்தில் வடபெரும்பாக வித்தியாதரிசி பிரஹ்மஸ்ரீ யா தி சதாசிவ ஐயரவர்களைப் பாராட்டுதற்பொருட்டுக் கூட்டிய கூட்டம் ஸ்ரீமத் க. நடேசபிள்ளை M. S. C. அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. தலைவரவர்களையும் ஐயரவர்களையும் எதிர்சென்றழைத்து மாலைசூட்டுபசரித்து வரவேற்கப்பட்டது. தலைவர் முன்னுரையில் ஐயரவர்களின் சிறப்பியல்புகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கூறியபின்னர் வாழ்த்துப்பா படித்தளிக்கப்பட்டது. ஐயரவர்களின் சேவை நலத்தை ஸ்ரீ. ப. இராமநாதபிள்ளை, ஸ்ரீ செ. கனகசபாபதிப்பிள்ளை முதலிய பல அன்பர்கள் பாராட்டிப் பேசினுர்கள். ஆசிரியர் ஸ்ரீ இ. மருதையனுர் அவர்கள் ஐயரவர்களின் சேவை நலத்தை விளக்கியதுடன் சிறப்பாக அவர்கள் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்க மூலமாகச் செய்த தொண்டுகளையுங் கூறி, அச்சங்கத்திற்கு ஓர் சங்க நிலையமும், வாசிகசாலையும், அச்சயந்திர சாலையும், கல்விகற்பதிற்றிறமையும் ஆர்வமுமுள்ள மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுக்கும் ஒழுங்கும் இன்றியமையாதனவெனக் குறிப்பிட்டார்கள். ஆசிரியர் ஸ்ரீ. க. செல்வத்துரையவர்கள் பாலபண்டித, பண்டித வகுப்பிற் சித்தியெய்திய ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பள உயர்ச்சி இப்பொழுது இல்லாதிருத்தலைக் குறிப்பிட்டுப் பேசியபொழுது, தலைவரவர்கள் அவ்விஷயத்தில் தாம் முயற்சி செய்வதாகவும், விரைவில் அதை எதிர்பார்க்கலா மெனவுங் கூறியது எல்லோர்க்கும் மகிழ்ச்சியை உண்டாக்கியது. பின்னர் ஐயரவர்கள் தினைத்துணை நன்றியைப் பனைத்துணையாகக் கொண்டு பெரிதும் பாராட்டுகின்றீர்கள் எனக் கூறிப் பெரியதோர் பொருளுரை நிகழ்த்தினர். சங்கீதபூஷணம் செல்வி இ. பாஞ்சோதி அம்மையாரால் 'சீத்த மாலினி' என்னும்சரித்திரம் பேசப்பட்டது. அம்மையாரின் சங்கீதத்திறமையையும், சொல்லாற்றலையும் தலைவரவர்களும் சபையோரும் வியந்து பாராட்டினர்; நன்றி கூறப்பட்டதும் கூட்டம் இறைவெய்தியது.

கடித.

சீனுவுக்குப் பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டி

வழியில் இந்தியாவுக்கும் வரும்

லண்டன் அக் 17

சீனுவுக்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்டரித் தூதுக்கோஷ்டி லண்டனை விட்டுப் பிரயாணமாயிற்று. அவர்கள் சீனுவுக்குப் போகும்போது இந்தியாவில் சில நாட்கள் தங்கியிருப்பர் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பழைய கடிதங்கள்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

1916-ம் ஆண்டில் சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் வருடாந்தக் கூட்டம் திருவண்ணுமலையிற் கூட உத்தேசம். காறுமழையால் உண்டானசேதத்தால் முதலில் எண்ணியபடி திருவண்ணுமலையிற் கூடுவது அசாத்தியமாயிற்று. அதனுல் திருமயிலையில் கூடுவதாகத் தீர்மானிக்கலாயிற்று. அப்போது சமாஜ காரியதரிசியாக இருந்தவர் என் பிரிய நண்பராகிய ஸ்ரீ. குப்புச்சாமி முதலியார் அவர்களாவர். அவர் சமாஜக் கூட்டத் தலைவராக யாரை நியமிக்கலாமென்று என்னுடு யோசித்தார். யான் முதலியாரவர்கள் பெயரைக் குறிப்பிட்டேன். என்னையே அவருக்குத் தந்தி அனுப்பும்படி வேண்டினர். அத்தந்திக்குப் பதிலாக முதலியார் அவர்கள் எழுதிய கடிதத்தைப் பின்னே காணலாம். சமாஜ சம்பந்தமாக முதலியாரவர்கள் சென்னைக்கு விஜயஞ் செய்தபோதே யான் அவர்களை முதன் முதற் கண்டது. முதலியாரவர்கள் தலைமையில் நடந்த சமாஜவிழாக் காட்சியைப்போல் முன்னுமில்லை பின்னுமில்லை யென்பது பலர் கருத்து.

யாழ்ப்பாணம்,
8-12-1916

எனது பிரியமுள்ள
ஐம்புலிங்கமவர்களுக்கு,

தங்கள் தந்தியை நேற்றும் கடிதத்தை இன்றும் பெற்றேன். தங்கள் தந்திக்குப் பதில் நேற்றே கொடுத்திருப்பேன். ஆனுல் யோசிக்கலாமென்று எண்ணினேன். நேற்றே பதில் கொடுத்திருந்தால் வர இயலாதென்றே கூறியிருப்பேன். ஆனுல் ஆலோசித்தபிறகும் என்னுடைய சிநேகிதர்களோடு ஆலோசனை செய்த பிறகும் தலைமை வகிக்க ஒப்புக்கொள்ளலா மென்று நிர்மானித்தேன். வேண்டுகோள் தங்கள் மூலமாக வந்துள்ளபோது யான் மறுக்கக் கூடாதவனுயிருக்கின்றேன்.

என்னுடைய மகனின் திருமணம் நாளைக்கு நிகழ இருக்கின்றது. யான் இருந்து நடத்த வேண்டிய இதர காரியங்களுஞ் சிலவுள. ஆயினும் எனது சமயத்தின் பொருட்டு அவற்றை நிராகரித்தே தீரவேண்டும்; ஆதலால் தாங்கள் கேட்டபடி தலைமை வகிக்க ஒப்புக்கொள்ளலானேன். அப்பெருங்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கக்கூடிய திறமை என்னிடமில்லை யென்பதைத் தெரிவிக்கலானேன். தாங்கள் என்னை அருகனென்று தேர்ந்தெடுத்தமையால், யான் மறுக்கவில்லை.

கூட்டம் கூடப்போகும் தேதியைத் தெரிவித்தால் யான் வேண்டிய ஒழுங்குகளைச் செய்ய ஏதுவாயிருக்கும்.

தங்கள் உண்மையுள்ள,
ச. சபாரத்தினம்.

சிவஞானபோத நூல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்ய சிந்தனைக்குரிய சிவஞானபோத சாஸ்திரத்தை ஆசாரியர் கொடுக்க; காக்கு மனக் காயங்களினுலே அநுக்கிரகம் பாலனைய எந்தச் சீடன் உளனே, அவன் ஆசாரியர் பொருட்டுப் பொருள்உயிர் அமைமனமென்பனவற்றை நிவேதிக்க,' என இரௌரவாகமத்துத் தீக்ஷாவிதிப் பிரகாணம் கூறலானும், சிவஞானபோதம் ரௌரவாகமத்தில் உள்ளது என்றும், பாஞ்சோதி முனிவர் மெய்கண்டார் கணித்தது வடமொழிச் சிவஞானபோத மொழிபெயர்ப்பு என்று உணரப்படும். இங்ஙனமே திருப்பெருந்துறைப் புராணத்தில், பரமாசாரியர் திருவாதவூரராகிய சிஷ்யருடைய கரத்தில் சிவஞான போதத்தைக் கொடுத்து, அதன் பொருளையும் உபதேசித்தருளினர் என்று கூறப் பட்டது.

நின்றமையும் வாதவூர் முனிவரனை
யருளோங்கா னிரம்ப நோக்கி
நன்றமைய சேருத்திச் சிவஞான
போதமெனு நன்னூல்
கைக் கொண்
டின்றமைய வுலகோப காரமாகக்
கைக் கொணமி னென்று நல்கி
யன்றமைய லதனகத்துப் பொரு
ளனைத்தும் தொகுத்தருளி
வறைவ தானுர்

"மெய்கண்டாராவது, அவர் மாணுக்கராவது, அல்லது அவர் பரம்பரையில் வந்தவர்களாவது சிவஞானபோதத்தை மொழிபெயர்ப்பு நூலென்றும், அல்லது பாஞ்சோதி முனிவர் உபதேசித்தது வடமொழிச் சிவஞான போதமென்றும் ஓரிடத்தும் ஒரு காலத்தும் கூறவேயில்லை'' என்று கூறுவாருமுளர். அது ஆராய்ச்சியின்மையால் வந்த கருத்தாமாறு தெரிப்பாம். —(வரும்)

இலங்கை யுத்தமுயற்சி சம்பந்தமான
சித்திரப் போட்டி

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலும் நடைபெறும் யுத்த முயற்சி சம்பந்தமான சித்திரங்களைப் பற்றிக் குடியேற்றமந்திரி ஒரு திட்டம் தயாரித்திருக்கிறர். இத்திட்டம் பற்றிச் சித்திரகாரருக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக ஒரு கமிட்டியைப் பிரதம காரியதரிசி நியமித்திருக்கிறர்.

இராணுவத்துக்குப் படைதிரட்டல், பயிற்சி அளித்தல், யுத்தநடவடிக்கைகள் செய்தல், உணவு உட்படப் பலவகையான சாமான்களை உற்பத்தி செய்தலாகிய இன்னோரன்ன யுத்த முயற்சிகளைப் பற்றிச் சித்திரங்கள் வரையலாம்.

இராணுவ சம்பந்தமான விஷயங்களைப் பற்றிச் சித்திரம் வரைவதானுல் கமிட்டியார் பொதுஜன சம்பந்தத்தை ஏற்படுத்தும் உத்தியோகத்தரான மேஜர் 'டிரேக்கின்' உதவியைப் பெறலாம். இம்மாதிரி விஷயங்களைப் பற்றிய விண்ணப்பங்கள் மேஜர் டிரேக்கினிடமே ஒப்படைக்கப் படவேண்டும்.

சித்திரப் போட்டியிற் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயரை அதற்கான 'ஏ' பாரத்தில் பதிவுசெய்து கொள்வதற்காகச் சமாச்சாரப் பகுதித் தலைவருக்கு விண்ணப்பஞ் செய்து கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு பதிவு செய்தபின் இராணுவ நிலையங்களை விண்ணப்பஞ் செய்தோர் பார்க்க விரும்பினுல், சமாச்சாரப் பகுதித் தலைவருக்கு விண்ணப்பஞ் செய்யலாம். எதைப் பற்றிய சித்திரம் என்றும் இராணுவத்தின் எந்த இடத்துக்குப் போக வேண்டும் என்றும் விண்ணப்பத்தில் தெரிவிக்கப் படவேண்டும்.

மேலைத் தேசச் சித்திர முறையைப் பின்பற்றுவோருக்கு அதிக சலுகை காட்டப்படும். ஆனுல், சகல அம்சங்களிலும் இலங்கைச் சாயலுடைய படங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும் என்பதாகக் குடியேற்ற நாட்டு மந்திரி தெரிவித்திருக்கிறர்.

பரிசு விபரம் பின்வருமாறு:-
1-ம் பரிசு—300 ரூபாய், 2-ம் பரிசு—200 ரூபாய் 3-ம் பரிசு—100 ரூபாய்
20 சிறிய பரிசுகள் ஒவ்வொன்றும் 50 ரூபாய்.

சிறந்த படங்கள் தெரிவு செய்யப்பட்டு லண்டன் சமாசாரப் பகுதிக்கு அனுப்பப்படும். அங்கே இப்படங்களுட் சிறந்தவற்றை அரசாங்கத்தார் விலை கொடுத்து வாங்கிக் கலாபவனங்களிலும் சித்திரசாலைகளிலும் காட்சிக்கு வைப்பார்கள். சம்பந்தப்பட்ட தேசங்களின் யுத்த முயற்சிக்கு அறிகுறியாக இப்படங்கள் சேமித்து வைக்கப்படும். மேலும் சிறந்த படங்களை ஏகாதிபத்திய நாடுகட்குக் காட்சிக்காக அனுப்பி வைப்பார்கள். எனவே, பரிசுப்பணம் மாத்திரமல்ல; பெரும் புகழும் கிடைக்கக் கூடிய இவ்வருந் தருணத்தைச் சித்திரகாரர் இழந்து விடக்கூடாது.

இது சம்பந்தமான விண்ணப்பப் பத்திரங்கள் 1943-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் திகதிக்குப் பிந்தாமல் சமாச்சாரப் பகுதித் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆர். பட்ரிச்,
சமாச்சாரப் பகுதித் தலைவர்.

G 30 15-22.10. 42.

பிரதானமான அறிவித்தல்
லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்றர். S. சாஸ் பத்திரான
இப்போது கிறைண்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்றீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறர்.
இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரை அங்கு இருப்பார்.
ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக
தம்பராவாத் தோட்டம், வரியப்போலா, வடமேல்மாகாணம்.
Y115 18-8-42—17-11-42

விளம்பர விகிதம்
முதன் முறைக்கு

ஒரு கலம் ரூபா	10-00	அரைக்கலம் ரூபா	5-50
கால் கலம் ரூபா	4-00	ஒரு அங்குலம் ரூ.	1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்பட மாட்டா.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரொப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4-3-42——3-3-43

வெளிவந்துவிட்டது!
சைவ சித்தாந்த உண்மை
சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பயிலவிரும்பும் ஆங்கில மாணவருக்கு இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியமுறையில், "விஞ்ஞான சாத்திர அறிஞர்" ஒருவரால் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்திற் காலத்தோறும் எழுதி வெளியிடப்பெற்று வந்தது; இதனை இப்பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் தொகுத்துப் புத்தகவடிவிற் பலர்க்கும்பயன்படும் வண்ணம் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இது பதினைந்து அதிகாரங்களைக் கொண்டது; திருவாளர் சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிய நான்முகத்தோடு கூடியது. 150 பக்கங்கள் வரையிற் கொண்டது. சைவமக்களெல்லாரும் இலகுவில் வாங்கிப் படிக்கவேண்டுமென்ற நோக்கம்பற்றிப் பிரதியொன்று விலைகுறைத்து 50 சதமென விற்கப்பட்டுள்ளது. பெறவிரும்புவோர், மனேஜர், யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திரசாலை, வண்ணர் பண்ணை என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday 22th October, 1942